கமெண்ட் கந்தர்...



நேத்து நடந்த மக்கள் எதிர்ப்பு போராட்டம்
அரசாங்கத்துக்கு
எந்த செய்தியையும்
சொன்னதோ
இல்லையோ
தெரியேல்ல...
ஆனா, பலமான
எதிர்க்கட்சி ஒண்டு
இல்லையெண்டதை
மட்டும் பகிரங்கமா
சொல்லிப்போட்டுது
பாருங்கோ...

Follow us:

தமிழன்

THAMILAN தமிழன்

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர் : 03, இதழ்: 96 சுபகிருது வருடம், ஐப்பசி மாதம் 17ஆம் திகதி வியாழக்கிழமை
(03.11.2022) ஹிஜ்ரி 1444, ரபிஉல் ஆகிர் - 08, 0115886187 - பக்கங்கள் 10

விலை ரூ.60

உஷ்

புதிய அரசியல் கட்சியொன்றை ஆரம்பிப்பது குறித்து தனது நெருக்கமான சகாக்களுடன் ஆலோசித்து வருகிறாராம் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா.

அதேபோல தனது கொள்கைகளுடன் இணங்கிச் செயற்படுபவர்கள் பலரை ஒன்றிணைத்து வியத்மக போன்ற ஆலோசனைச் சபை ஒன்றையும் அமைக்க ஏற்பாடுகளை செய்து வருகிறாராம் பொன்சேகா.

ஐக்கிய மக்கள் சக்தி தற்போது நடந்துகொள்வதைவிட சற்று அதிரடியாக, சிங்கள மக்களை கவரும் விதத்தில் நடந்துகொள்ள வேண்டுமென அடிக்கடி ஆதங்கப்படுகிறாராம் பீல்ட் மார்ஷல்.

முடங்கியது கொழும்பு!

படப்பிடிப்பு : பிரதீப் தம்பரகே

அரசுக்கு எதிரான ஆர்ப்பாட்டத்தில் பெருந்திரளான மக்கள் அணிதிரள்வு

•நா.தினுஷா

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கத்துக்கு எதிர்ப்பு தெரிவித்தும் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டுள்ள சமூக செயற்பாட்டாளர்களை விடுவிக்குமாறு கோரியும் பல்கலைக்கழக மாணவர்கள், சிவில் அமைப்புகள், அரசியல் கட்சிகள் இணைந்து கொழும்பில் நேற்று நடத்திய போராட்டத்தில் பெருந்திரளானோர் கலந்துகொண்டிருந்தனர்.

02 பக்கம்

ரிஷாட் விடுதலை

•நா.தினுஷா

உயிர்த்த ஞாயிறு தினத் தற்கொலை குண்டுத் தாக்குதல் சம்பவத்தில் சந்தேகநபராக அறிவிக்கப்பட்டிருந்த நாடாளுமன்ற உறுப்பினர் ரிஷாட் பதியுதீன், சட்டமா அதிபரின் ஆலோசனைக்கமைய அந்த வழக்கிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளார்.

கொழும்பு, கோட்டை நீதவான் நீதிமன்ற நீதவான் திலின கமகேவினால் நேற்று இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

02 பக்கம்

08 மாவட்டங்களுக்கு மண்சரிவு எச்சரிக்கை

•கே.சுபானி

நாட்டின் பல பகுதிகளில் மழையுடனான சீரற்ற காலநிலை தொடர்வதால் அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தினால் 8 மாவட்டங்களுக்கு மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அதனடிப்படையில் பதுளை, கண்டி, கேகாலை, குருநாகலை, மாத்தறை, மொனராகலை, நுவரெலியா மற்றும் இரத்தினபுரி ஆகிய எட்டு மாவட்டங்களுக்கு மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக அந்நிலையம் நேற்று வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

02 பக்கம்

நெருக்கடிக்கு நாமலும் காரணம்

சன்ன ஜயசுமன கூறுகிறார்

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ எவருடைய கருத்தையும் கவனத்தில் கொள்ளவில்லை. குறைந்தது முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் நிலைப்பாடுகளைக் கூட அவர் பொருட்டாக எடுத்துக்கொள்ளவில்லை. நாமல் ராஜபக்ஷ போன்ற அவரின் குடும்பம் சார்ந்த சிலரின் தவறான அறிவுரைகளை செவிமடுத்ததன் காரணமாகவே நாட்டில் இவ்வாறானதொரு நெருக்கடி நிலை ஏற்பட்டுள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் சன்ன ஜயசுமன தெரிவித்துள்ளார்.

02 பக்கம்

அரசியல் வேறுபாடுகளுக்கு அப்பால் செயற்பட வேண்டும்!

முற்போக்குக் கூட்டணியின் விழாவில் பங்கேற்றமை அதன் ஆரம்பகட்டமே என்கிறார் ஜீவன்

“தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைமையக திறப்புவிழாவில் பங்கேற்குமாறு மலையக அரசியல் கட்சிகளும், தோட்டத் தொழிலாளர் தொழிற்சங்கங்களும் மனமுவந்து எனக்கு அழைப்பு விடுத்தன. அதன் காரணமாக அந்நிகழ்வில் நான் பங்கேற்றேன். மக்களின் நலன் சார்ந்த விடயங்களில் அரசியல் வேறுபாடுகளுக்கு அப்பால் மலையகத்தின் ஏனைய அரசியல் தரப்புகளுடன்...

02 பக்கம்

கண்காணிப்புக் கப்பல் அமெரிக்காவால் அன்பளிப்பு

கொழும்பை நேற்று வந்தடைந்தது

படப்பிடிப்பு : பிரதீப் தம்பரகே

•ம.சுசிகலா

அமெரிக்காவினால் நாட்டிற்கு அன்பளிப்பு செய்யப்பட்ட டக்லஸ் மன்ரோ P627 எனும் ஆழ்கடல் கண்காணிப்புக் கப்பல் கொழும்பு துறைமுகத்தை நேற்று வந்தடைந்தது.

டக்லஸ் மன்ரோ கப்பலை வரவேற்கும் நிகழ்வு நேற்று காலை கொழும்பு துறைமுகத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்வு கடற்படை தளபதி அட்மிரல் நிஷாந்த உலுகேதென்ன தலைமையில் இடம்பெற்றதுடன், பாதுகாப்பு செயலாளர் ஓய்வுபெற்ற ஜெனரல் கமல் குணரத்ன, பாதுகாப்பு பதவிநிலை தலைமை அதிகாரி ஜெனரல் ஷவேந்திர சில்வா, இராணுவத் தளபதி லெப்டினன் ஜெனரல் விக்கும் லியனகே, விமானப்படை தளபதி எயார் மார்ஷல் சுதர்ஷன பத்திரண மற்றும் இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங் உள்ளிட்ட முக்கியஸ்தர்கள் கலந்து கொண்டனர்.

02 பக்கம்

ரூ.650 கோடி நீர்க்கட்டணம் நிலுவையில்

•கே.சுபானி

தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபைக்கு அரச நிறுவனங்கள் மற்றும் பொதுமக்களால் இதுவரை 650 கோடி ரூபா நீர்க்கட்டணம் செலுத்தப்படாது நிலுவையிலுள்ளதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதில் அரச நிறுவனங்களால் மாத்திரம் 800 மில்லியன் ரூபா செலுத்த வேண்டியுள்ளதுடன், அந்தத் நிலுவைத் தொகையை மீளப்பெறுவதற்கு விசேட செயற்றிட்டமொன்று முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும் தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் உதவிப் பொது முகாமையாளர் ஏக்கநாயக்க வீரசிங்க தெரிவித்துள்ளார்.

02 பக்கம்

திலினி, தேரர் உள்ளிட்ட மூவருக்கு விளக்கமறியல்

பாரிய நிதிமோசடி தொடர்பில் கைது செய்யப்பட்டு, தடுத்து வைக்கப்பட்டுள்ள திகோ குழுமத்தின் உரிமையாளர் திலினி பிரியமாலி, அவரது வர்த்தகப் பங்காளராகக் கருதப்படும் இசுறு பண்டார ஆகியோரை இம்மாதம் 16ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு கோட்டை நீதவான் நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டதுடன், சந்தேகத்தின்பேரில் கைதுசெய்யப்பட்ட பொரளை சிறிசுமண தேரரையும் அன்றைய தினம் வரை விளக்கமறியலில் வைக்கப் பணித்தது.

02 பக்கம்

வன்முறைகளால் அரசை கவிழ்க்க சிலர் முயற்சி

பயங்கரவாத செயற்பாடென ரோஹித எம்.பி. தெரிவிப்பு

•நா.தினுஷா

அரசாங்கமொன்றை ஸ்தாபிப்பதும் அதனை நிராகரிப்பதும் மக்களின் ஜனநாயக உரிமை. ஆனால், வெற்றியோ தோல்வியோ இரண்டையும் ஜனநாயக ரீதியான தேர்தலினூடாகவே தீர்மானிக்க வேண்டும். மாறாக வன்முறைகளினாலும் அல்லது வேறு ஏதாவது முறையினூடாக அரசாங்கத்தை வெளியேற்ற முயற்சித்தால் அதனை ஜனநாயகமாக கருதமுடியாது. அதனைப் பயங்கரவாத செயற்பாடாகவே தாம் கருதுவதாக ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின்...

02 பக்கம்

என்னையும் முஸ்லிம்களையும் அழிவுக்குள் தள்ளிவிட்டார்கள்



ரிஷாட் எம்.பி. ஆவேசம்

•நா.தினுஷா

உயிர்த்த ஞாயிறு தின தொடர் குண்டுத்தாக்குதல் சம்பவங்களுடன் என்னையும் முஸ்லிம் சமூகத்தையும் தொடர்புபடுத்தி போலிக் குற்றச்சாட்டுகளை முன்வைத்து தேர்தலில் வெற்றியடைந்தார்கள். ஆனால், என்மீது முன்வைக்கப்பட்ட அனைத்து போலிக்குற்றச்சாட்டுகளையும் நீதிமன்றத்தின் தீர்ப்பு தவிடுபொடியாக்கியுள்ளது என்று அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரிஷாட் பதியுதீன் தெரிவித்தார்.

ரிஷாட் எம்.பி. தொடர்பான வழக்கு கொழும்பு கோட்டை நீதவான் நீதிமன்றத்தில் நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

02 பக்கம்

54 மாணவர்கள் மருத்துவமனையில்!

நச்சுப் புகையை சுவாசித்ததால் பாணந்துறையில் சம்பவம்

•கே.சுபானி

பாணந்துறை பகுதியில் நச்சுப் புகையை சுவாசித்த 54 மாணவர்கள் நேற்று வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

பாணந்துறை நகரிலுள்ள ரோயல் கல்லூரியின் ஆரம்பப் பிரிவில் கல்வி கற்கும் மாணவர்களே வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மேற்படி பாடசாலையை அண்மித்த வீடொன்றில் வயர் உட்பட கழிவுப்பொருட்களை எரியூட்டியதால் அதிலிருந்து வெளியேறிய புகையை சுவாசித்ததன் காரணமாக மாணவர்களுக்கு மூச்சுத் திணறல் உட்பட சுவாசக் கோளாறு ஏற்பட்டுள்ளது.

இதனையடுத்து உடனடியாக அம்பியூலன்ஸ்கள் வரவழைக்கப்பட்டு, மாணவர்கள் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை வழங்கப்பட்டது.

விலை குறைந்த எண்ணெய் வகைகள் அதிக டொலர் பெறுமதியில் விலைமனுக்கோரலின்றி இறக்குமதி

விசாரணை செய்யுமாறு கோரி தயாசிறி எம்.பி. இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவிடம் முறைப்பாடு

(படப்பிடிப்பு – கிரிஷான் காரியவசம்)

டொலர் நெருக்கடியின் மத்தியிலும், விலைமனுகோரலின்றி குறைந்த பெறுமதியுடைய எண்ணெய் வகைகளை அதிக விலை கொடுத்து இறக்குமதி செய்துள்ளதாகவும், இதுதொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்து இவ்வாறான ஊழல் இடம்பெற்றிருக்கிறதா, இல்லையா என்பது குறித்து விசாரணை நடத்துமாறும் தெரிவித்து நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர இலஞ்ச, ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவில் நேற்று முறைப்பாடு செய்துள்ளார்.

அதன்பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த அவர் பின்வருமாறு குறிப்பிட்டார்.

எண்ணெய் இறக்குமதியின்போது இடம்பெற்ற சிக்கல் நிலைகள் குறித்து இதற்கு முன்னர் ஊடக சந்திப்பொன்றில் தெரிவித்திருந்தேன். மேர்பன் வகையைச் சேர்ந்த எண்ணெய் விலை பெறுமதியில் யூரல் வகை எண்ணெய் இறக்குமதி செய்யப்பட்டுள்ளது. இவற்றின் விலையில் சராசரியாக ஒரு பீப்பாயின் விலை 25 – 30 டொலர் வித்தியாசம் இருக்கிறது.

விலைமனுக்கோரலின்றி இந்த எண்ணெயை இறக்குமதி செய்வதற்கான அமைச்சரவை அனுமதியை அமைச்சர் காஞ்சன விஜேசேகர பெற்றுக்கொண்டுள்ளார். டொலர் நெருக்கடியின் மத்தியிலேயே இந்த எண்ணெய் வகை இறக்கமதி செய்யப்பட்டுள்ளது. இவை நேரடியான கோரப்படாத முன்மொழிவுகளின் அடிப்படையிலேயே இறக்குமதி செய்யப்படுகின்றன. கோருபவரின் விருப்பத்துக்கேற்ப கொண்டு வரப்படும் எண்ணெயாகவே இது கருதப்படுகிறது.

சாதாரணமாக ஒரு பீப்பாய் பிரீமியம் எண்ணெயின் பெறுமதி 5 டொலருக்கும் குறைவாகும். ஆனால், தற்போது கொண்டு வந்துள்ள இந்த வகை எண்ணெய் ஒருசில 33 டொலருக்கும், ஒருசில 25 டொலருக்கும் கொண்டுவரப்பட்டுள்ளன. எனவே, ஐந்து டொலர் செலுத்தவேண்டிய பிரீமியம் வகை எண்ணெய்க்கு 25 – 30 டொலர் செலுத்தி இறக்குமதி செய்துள்ளார்கள். இதுதொடர்பில் நாடாளுமன்றத்திலும் தொடர்ச்சியாக கருத்து வெளியிட்டுள்ளோம்.

இந்நிலையிலேயே இதுதொடர்பில் இலஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்துள்ளோம். இதுதொடர்பில் விசாரணைகளை முன்னெடுக்க சம்பந்தப்பட்ட அமைச்சின் அதிகாரிகள் உள்ளிட்ட சகலரையும் அழைத்து வாக்குமூலங்களைப் பெற்று இதுபோன்ற ஊழல் இடம்பெற்றிருக்கிறதா, இல்லையா என்பது குறித்து ஆராயுமாறே கோரியுள்ளோம் - என்றார்.

பிணை செலுத்தாததால் 16 வருடங்கள் சிறையில்

சந்தேக நபருக்கு நேர்ந்த சோகம்

(ம. அகிலேஸ்)

கொழும்பு பிரதேசத்தைச் சேர்ந்த நபரொருவர் நீதிமன்றத்தால் பிணை வழங்கப்பட்டும் அந்த பிணைக்கான பணத்தை செலுத்த முடியாமல் 16 வருடமாக வெலிக்கடை சிறைச்சாலை தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளார்.

கொழும்பு 13, புளுமென்டல் வீதியைச் சேர்ந்த ஜேமிஸ் லோரன்ஸ் அன்டனி 2004ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 9ஆம் திகதி இடம்பெற்ற கொலைச்சம்பவம் தொடர்பில் சந்தேகத்தின்பேரில் குற்றவியல் விசாரணை திணைக்களத்தினரால் கைதுசெய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டார்.

ட443/05/2004 இலக்கத்தின் பிரகாரம் குறித்த நபருக்கு எதிராக 2004ஆம் ஆண்டு கொழும்பு குற்றவியல் விசாரணைப் பிரிவினரால் கொழும்பு மேல் நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டது.

அதன்பின்னர் UCCA/726/2007 இலக்கத்தின் பிரகாரம் அவருக்கு 50 ஆயிரம் ரூபா பிணை வழங்கப்பட்டது. அந்த நபர் பிணை பணத்தினை செலுத்த முடியாமல் கடந்த 16 வருடங்களாக தடுப்புக்காவலில் உள்ளார்.

இது தொடர்பில் தடுப்புக்காவலில் உள்ள குறித்த நபர், இந்த வழக்கு மேன்முறையீட்டு நீதிமன்றத்திற்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ள சரியான நடவடிக்கைகளை சிறைச்சாலை நீதித்துறைக்குப் பொறுப்பான அதிகாரிகள் எடுக்காமையும், அதனை சமர்ப்பிக்க தாமதிப்பதால் கவனயீனமாக இருப்பதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் மேன்முறையீட்டு நீதிமன்றத்திடம் ஏற்கனவே வழங்கப்பட்டுள்ள பிணை பணத்தொகையை செலுத்தமுடியாதுள்ள நிலையில் அவரை சீரப் பிணையில் விடுவிக்குமாறு கோரிக்கை விடுத்துள்ளார்.

இனிப்புப் பண்டங்கள் இறக்குமதியாளருக்கு புதிய விதிமுறைகள்

•நா.தினுஷா

பொதியிடப்பட்டு இறக்குமதி செய்யப்படும் பொருட்கள் தொடர்பில் அதிகாரசபைக்கு முன்வைக்கப்பட்டுள்ள பிரகடனத்தின் பிரகாரம் அதிகூடிய சில்லறை விலை, இறக்குமதியாளர் பெயர் மற்றும் பதிவு செய்யப்பட்ட முகவரி போன்ற விபரங்கள் தெளிவாக குறிப்பிடப்பட்டிருக்க வேண்டுமென சகல இறக்குமதியாளர்களுக்கும் நுகர்வோர் அலுவல்கள் அதிகாரசபை அறிவித்துள்ளது.

இனிப்புப்பண்டங்கள், சொக்கலேட் போன்ற பொருட்களுக்கே இந்த விதிமுறைகள் வழங்கப்பட்டுள்ளதுடன் இவை இறக்குமதி செய்யப்பட்டு நாட்டுக்குள் கொண்டுவரப்படும் மேற்குறிப்பிட்ட விடயங்கள் குறிப்பிடப்பட வேண்டும் என்று அதிகாரசபை வலியுறுத்தியுள்ளது.

இதுதொடர்பில் நுகர்வோர் அலுவல்கள் அதிகாரசபையின் தலைவர் சாந்த நிரிஎல்லவினால் நேற்று முன்தினம் (01) வர்த்தமானி அறிவித்தலொன்று வெளியிடப்பட்டுள்ளது. அந்த வர்த்தமானி அறிவித்தலில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இனிப்புப் பண்டங்கள் (சுயிங்கம் உள்ளடங்கலாக), சொக்கலேட், பிஸ்கட், கேக், வாசனை சவர்க்காரம் போன்ற ஏற்கனவே பொதியிடப்பட்ட பண்டங்கள் மற்றும் உற்பத்திகள் நாட்டுக்குள் உள்நுழையும் இடத்திலேயே இறக்குமதிசெய்யப்பட்ட பொருட்களின் மேற்புறத்தில் இறக்குமதியாளர்களினால் நுகர்வோர் அலுவல்கள் அதிகாரசபைக்கு முன்வைக்கப்பட்டு பிரகடனப்படுத்தப்பட்டுள்ள அதிகூடிய சில்லறை விலை, இறக்குமதியாளரின் பெயர் மற்றும் பதிவு செய்யப்பட்ட முகவரி போன்ற விபரங்களை ஆங்கில மொழியில் தெளிவாக குறிப்பிட சகல இறக்குமதியாளர்களும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இந்த நடைமுறையானது நேற்று முன்தினம் முதல் அமுல்படுத்தப்பட்டுள்ளது.

மேலும், கடந்த 2007, ஜூலை மாதம் 11ஆம் திகதி இலக்கம் 1505/15 கொண்ட அரசின் அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட 12ஆம் இலக்க பணிப்புரை இரத்துசெய்யப்படுவதாகவும் அந்த வர்த்தமானியில் அறிவிக்கப்பட்டுள்ளது.

08 மாவட்டங்களுக்கு...

இதன்படி பதுளை மாவட்டத்தில் பண்டாரவளை, எல்ல பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பகுதிகளுக்கும் மற்றும் பசறை பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பகுதிகளுக்கும், கண்டி மாவட்டத்தின் கங்கா இஹல கோரள பகுதிக்கும், கேகாலை மாவட்டத்தின் எட்டியந்தோட்டை, தெஹியோவிட்ட, ருவன்வெல்ல மற்றும் தெரனியாகல ஆகிய பிரதேசங்களுக்கும் இதேபோன்று குருநாகல், மாத்தறை, மொனராகலை, நுவரெலியா மற்றும் இரத்தினபுரி ஆகிய மாவட்டங்களின் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பகுதிகளுக்கும் மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

குறித்த பகுதிகளில் வசிக்கும் மக்களை மிகுந்த அவதானத்துடன் இருக்குமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

இதேவேளை, வடக்கு, மேல், வடமேல் மாகாணங்களில் காலைவேளையில், மழை பெய்யக்கூடும் என்றும் நாட்டின் ஏனைய பகுதிகளில் மாலை அல்லது இரவில் மழை பெய்யலாம் என்றும் வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வுகூறியுள்ளது.

கண்காணிப்புக் கப்பல்...

அமெரிக்க கடற்படை பாதுகாப்புத் திணைக்களத்தினால் இலங்கைக்கு இந்தக் கப்பல் அன்பளிப்பு செய்யப்பட்டதாக கடற்படை ஊடகப் பேச்சாளர் கெப்டன் இந்திக்க டி சில்வா தெரிவித்தார். குறித்த கப்பல், அமெரிக்காவிலிருந்து நாட்டை வந்தடைவதற்கு 02 மாதங்கள் கடந்துள்ளன. அமெரிக்காவின் சியடெல் துறைமுகத்திலிருந்து கடந்த செப்டெம்பர் மாதம் 3ஆம் திகதி குறித்த கப்பல் இலங்கைக்கு தனது பயணத்தை ஆரம்பித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இலங்கைக்கு டக்லஸ் மொன்ரோவை வரவேற்பதோடு, இலங்கையின் கடல்சார் இறையாண்மையை மேம்படுத்த இக்கப்பல் உதவியளிக்கும் என எதிர்பார்ப்பதாக அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங் தனது ட்விட்டர் பக்கத்தில் தெரிவித்துள்ளார்.

இரண்டாம் உலகப்போரின்போது அமெரிக்க கரையோரப் பாதுகாப்புக் கடமைகளில் அர்ப்பணிப்புடன் செயற்பட்ட டக்லஸ் எல்பர்ட் மன்ரோ என்பவரின் நினைவாக அவரின் பெயரை இந்தக் கப்பலுக்கு சூட்டி அந்நாட்டு அரசாங்கம் கௌரவப்படுத்தியமை குறிப்பிடத்தக்கது.

என்னையும் முஸ்லிம்களையும்...

நீதிமன்ற நடவடிக்கைகளின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இதுதொடர்பில் அவர் மேலும் குறிப்பிடுகையில்,

பொய்க் குற்றச்சாட்டுகளை முன்வைத்து என்னையும் எனது சமூகத்தையும் அழிவுக்குள் தள்ளிவிட்டார்கள். கடந்த ஜனாதிபதித் தேர்தலில் வெற்றியடைய வேண்டும் என்பதற்காகவே என்மீது பொய்க் குற்றச்சாட்டுகளை முன்வைத்தார்கள். உயிர்த்த ஞாயிறு தின குண்டுத்தாக்குதல் சம்பவங்களுடன் என்னையும் முஸ்லிம் சமூகத்தையும் தொடர்புபடுத்தி தேர்தலில் வெற்றியடைந்தார்கள். தேர்தலின் பின்னரும் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் என்னை கைதுசெய்து விளக்கமறியலில் வைத்தார்கள். ஏழு மாதங்கள் சிறைத்தண்டனை அனுபவித்தேன்.

என்மீது முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுகள் அனைத்தும் அடிப்படையற்றவை என்று நாடாளுமன்றத்தில் தொடர்ச்சியாக அறிவித்திருந்தேன். இன்று நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பின் மூலம் எனது நிலைப்பாடு நிரூபிக்கப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும், கோட்டாபய ராஜபக்ஷ அவரின் ஆட்சிக்காலம் முடியும் முன்னரே மக்களின் எதிர்ப்பை சந்தித்து, இன்று மக்களால் துரத்தியடிக்கப்பட்டுள்ளார் - என்றார்.

ரிஷாட் விடுதலை...

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் சம்பவம் தொடர்பில் கடந்த 2021ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 24 ஆம் திகதி குற்றவியல் விசாரணைத் திணைக்கள அதிகாரிகளினால் கைதுசெய்யப்பட்டிருந்ததுடன், இந்தத் தாக்குதல் சம்பவங்களுக்கு உதவிய குற்றச்சாட்டில் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின்கீழ் தடுத்து வைத்து விசாரணை செய்ய நீதிமன்ற அனுமதியைப் பெற்றிருந்தது.

இந்நிலையில், நாடாளுமன்ற உறுப்பினர் ரிஷாட் பதியுதீன் கடந்த வருடம் ஒக்டோபர் மாதம் பிணையில் விடுதலை செய்யப்பட்டிருந்தார்.

அவரை 50 இலட்சம் ரூபா பெறுமதியான இரண்டு சீரப் பிணையில் விடுதலை செய்ய, கொழும்பு கோட்டை நீதிவான் பிரியந்த லியனகே உத்தரவிட்டிருந்தார்.

இந்நிலையில், இந்தச் சம்பவம் தொடர்பான வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோதே நீதவான் இந்த உத்தரவை பிறப்பித்துள்ளார்.

ரூ.650 கோடி நீர்க்கட்டணம்...

இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

நீர்க் கட்டணத்தை மீளப்பெறும் செயற்திட்டம் அந்தந்த பிரதேசங்களுக்கு உரித்தான நீர்வழங்கல் வடிகாலமைப்பு சபையினூடாக மேற்கொள்ளப்படவுள்ளது.

அத்தோடு 2023ஆம் ஆண்டு ஜனவரி முதலாம் திகதிமுதல் அமுலுக்கு வரும் வகையில், சாதாரண நுகர்வோரின் தாமதமான கொடுப்பனவுகளுக்கான 2.5 வீத மேலதிகக் கட்டணம் அரச நிறுவனங்களுக்கும் பொருந்தும் எனவும் தெரிவித்தார்.

திலினி, தேரர் உள்ளிட்ட...

திலினி பிரியமாலி சார்பில் மன்றில் ஆஜரான சட்டத்தரணிகள் பிணைச் சட்டத்தின் 14 (01) ஆம் பிரிவின் கீழ் அவரை பிணையில் விடுவிக்குமாறு கோரினர்.

எனினும், அந்தக் கோரிக்கையை நிராகரித்த நீதவான் திலின கமகே, சந்தேக நபர்களான திலினியையும் இசுறுவையும் எதிர்வரும் 16ஆம் திகதிவரை தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

இதேவேளை, திலினி பிரியமாலியுடன் நிதிக் கொடுக்கல் வாங்கல்களை மேற்கொண்டார் என்ற குற்றச்சாட்டில் நேற்றுமுன்தினம் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்ட சிறிசுமண தேரர் நேற்றைய தினம் கோட்டை நீதவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டார். இதனையடுத்து அவரையும் எதிர்வரும் 16ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டார்.

முடங்கியது கொழும்பு...

பெரும் எண்ணிக்கையிலான பொலிஸார் பாதுகாப்புக் கடமைகளில் ஈடுபட்டிருந்த நிலையில், மருதானை எல்பின்ஸ்டன் அரங்கிலிருந்து நேற்று மாலை 03.30 மணியளவில் ஆர்ப்பாட்டப் பேரணி ஆரம்பமானது.

போராட்டக்காரர்கள் அங்கிருந்து பேரணியாக கோட்டை ரயில் நிலையம் நோக்கிச் சென்றனர். இதன்போது மருதானை – புறக்கோட்டை வீதி மற்றும் அதனை அண்மித்த பகுதிகளில் பெரும் வாகன நெரிசல் ஏற்பட்டது.

எனினும், புறக்கோட்டை, டெக்னிக்கல் சந்திக்கு அருகில் வீதித் தடையை ஏற்படுத்திய பொலிஸார் போராட்டக்காரர்களை தொடர்ந்து முன்னேறிச் செல்லவிடவில்லை.

இதன் காரணமாக பெருந்திரளானோர் அங்கிருந்து கலைந்து சென்றனர். அதன்பின்னர் அவ்விடத்தில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் தயாசிறி ஜயசேகர, இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் ஆகியோர் உட்பட மேலும் பலர் ஆர்ப்பாட்டக்காரர்கள் மத்தியில் உரை நிகழ்த்தினர்.

இதேவேளை, அரசியலமைப்பின் மூலம் உத்தரவாதமளிக்கப்பட்டுள்ளதன் பிரகாரம் அடிப்படை உரிமைகளை மீறும் வகையில் பொலிஸ் அதிகாரத்தைப் பயன்படுத்தக்கூடாது என இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு வலியுறுத்தியுள்ளது.

போராட்டத்துக்கு பொலிஸார் இடையூறு விளைவிப்பதாக தொழிற்சங்கங்களால் மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு அறிவிக்கப்பட்டதையடுத்தே இவ்வாறு அந்த ஆணைக்குழு வலியுறுத்தியது.

அத்துடன், போராட்டத்தைக் கண்காணிக்க மனித உரிமைகள் ஆணைக்குழுவின் பிரதிநிதிகள் அனுப்பிவைக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

மேலும், கோட்டை, ரயில் நிலையத்தை அண்மித்த பகுதி ஆகியவற்றில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடக்கூடாது என போராட்டத்துக்கு முன்னர் தொழிற்சங்கங்களுக்கு அறிவுறுத்தல் வழங்கியுள்ளனர். எனினும், அதனை ஏற்றுக்கொள்ள மறுத்ததாக தொழிற்சங்கப் பிரதிநிதிகள் தெரிவித்தனர்.

வன்முறைகளால் அரசை...

நாடாளுமன்ற உறுப்பினர் ரோஹித அபேகுணவர்தன தெரிவித்தார்.

நெலும் மாவத்தையில் அமைந்துள்ள அந்தக் கட்சியின் தலைமையகத்தில் நேற்று (02) இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறுழகையில்,

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன ஸ்தாபிக்கப்பட்டு இன்றுடன் (நேற்றுடன்) ஆறு ஆண்டுகள் நிறைவடைகின்றன. இந்தக் கட்சி ஸ்தாபிக்கப்பட்டு குறுகிய காலத்தில் பெரும் மக்கள் பலத்துடனும், அவர்களின் ஆதரவுடனும் அரசாங்கமொன்றையும் அமைத்துக்கொண்டோம். இருந்தபோதும், துரதிர்ஷ்டவசமாக ஒருசில பிரச்சினைகளை எதிர்கொண்டு, சில சூழ்ச்சிகளினால் அரசாங்கத்தை இழக்க நேர்ந்துள்ளது. எங்கள் கட்சியை பிரதிநிதித்துவப்படுத்தியிருந்த ஜனாதிபதி, பிரதமர் பதவிகள் நீக்கப்பட்டது மாத்திரமல்லாமல் எங்களின் அமைச்சரவையும் முழுமையாக நீக்கப்பட்டுள்ளது. பொதுஜன பெரமுனவினால் பாரிய மக்கள் பலம் எங்களுக்கு கிடைத்தது.

அரசாங்கம் அமைக்கவும் முடியும். அந்த அரசாங்கத்தை எதிர்பார்த்ததுபோன்று இல்லாமலும் போகலாம். ஆனால், குறித்தவொரு அரசாங்கம் உருவாவதற்காக மூலதாரமாக அரசியல் கட்சியே அமைகிறது. அரசாங்கம் இல்லாவிட்டாலும் எங்கள் கட்சி செயற்பாடுகள் தொடர்ந்து சிறப்பாக இடம்பெறும். எதிர்வரும் காலங்களில் இடம்பெறும் எந்தவொரு தேர்தலாக இருந்தாலும் எமது கட்சியின் தலைமையில், எங்களுடன் இணையவுள்ள ஏனைய கட்சிகளையும் இணைத்துக்கொண்டு ஜனநாயக ரீதியாக அதற்கு முகங்கொடுக்க தயாராகவே இருக்கிறோம். எதுவே எங்களின் எதிர்பார்ப்பாகும்.

மக்கள் எதிர்பார்க்கும் ஜனநாயகத்தை உறுதிப்படுத்தும் கட்சியாகவே பொதுஜன பெரமுன எதிர்காலத்திலும் மிளிரும். எமது கட்சியின்மீது இரத்தக்கறை பட்டதில்லை. எமது கட்சி உறுப்பினர்களும் குற்றம் இழைத்தவர்கள் அல்ல.

அதனால், ஜனநாயக ரீதியாக அரசாங்கமொன்றை ஸ்தாபிப்பதற்கான உரிமை மக்களுக்கு இருக்கிறது. அவ்வேறு அரசாங்கத்தை இல்லாமலாக்கவும் முடியும். ஆனால், இந்த இரு விடயங்களும் தேர்தலினூடாகவே முன்னெடுக்கப்பட வேண்டும். அவ்வாறு இல்லாமல் வன்முறைகளினாலும் அல்லது வேறு ஏதாவது முறையினூடாக அரசாங்கத்தை வெளியேற்ற முயற்சித்தால் அதனை ஜனநாயகமாக கருதமுடியாது. அதனை பயங்கரவாத செயற்பாடாகவே கட்சி என்ற அடிப்படையில் நாங்கள் கருதுகிறோம்.

எனவே, ஜனநாயகத்துக்கு முக்கியத்துவம் கொடுத்து மக்களின் ஆதரவுடனேயே கட்சியாக முன்னேறினோம். அதனால், நாங்கள் இன்னும் பயணிக்க வேண்டியுள்ளது. அதனை வெற்றிகரமாக முன்னெடுப்போம்.

நெருக்கடிக்கு நாமலும் காரணம்...

தவறான ஆலோசனைகளின் பிரதிபலன்களையே நாட்டு மக்கள் இன்று அனுபவித்து வருகிறார்கள் என்பதை நாமல் நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும் என்றும் அனைத்து பாவங்களையும் இழைத்துவிட்டு, செய்த பாவங்களை தம்மீது சுமத்த முயற்சிக்க வேண்டாம் என்றும் அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

மக்கள் சந்திப்பொன்றில் கலந்துகொண்டு ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

கோட்டாபய ராஜபக்ஷவை நாட்டின் ஜனாதிபதியாக்க நாங்களே முழு முயற்சி எடுத்தோம். அதனை ஏற்றுக்கொள்கிறோம். நாங்கள் எதிர்பார்க்கும் விதத்தில் அவர் செயலாற்றுவார் என்ற நம்பிக்கையிலும் எதிர்பார்ப்பிலுமே பல்கலைக்கழக பேரசிரியர் பதவியை கைவிட்டு, விரிவுரையாளர் பதவியை கைவிட்டு, மருத்துவ தொழிலை கைவிட்டு கோட்டாவை ஜனாதிபதி பதவிக்கு நியமித்தோம். அதனூடாக நாடு முன்னேற்றமடையும் என்றும் நாங்கள் எதிர்பார்த்தோம்.

ஜனாபதியாக தெரிவுசெய்யப்பட்டு, ஆரம்பத்தில் சில மாதங்கள் நாங்கள் கூறியது போன்று செயற்பட்டார். இருந்தபோதும், சில மாதங்களாகும்போது கோட்டாபய ராஜபக்ஷ எங்களின் கருத்துகளை கணக்கில் எடுத்துக்கொள்ளவும் இல்லை. எங்களின் நிலைப்பாடுகளை கேட்கவும் இல்லை. அதன் காரணமாகவே அரசாங்கத்துக்குள் தற்போது இந்நிலை உருவாகியுள்ளது.

எங்களின் கருத்துகளை மாத்திரமல்ல, குறைந்தது மஹிந்த ராஜபக்ஷவின் நிலைப்பாடுகளை கூட அவர் கருத்திற்கொள்ளவில்லை. நாமல் ராஜபக்ஷ உள்ளிட்ட அவர் குடும்பத்தை சார்ந்த ஒருசிலரின் கருத்துகளை மாத்திரமே செவிமடுத்ததாக அவர் மேலும் குற்றஞ்சாட்டியுள்ளார்.

நாமல் ராஜபக்ஷ கூறும் விடயங்களை நிறைவேற்றச் சென்றே அரசாங்கத்துக்குள் குழப்பத்தை ஏற்படுத்திக்கொண்டார். மாறாக நாங்கள் கூறியதுபோன்று செயற்பட்டிருந்தால் இன்றைய நிலை ஏற்பட்டிருக்காது. இந்நிலையில், அனைத்து பிரச்சினைகளும் எங்களின் மீது சாடுவதற்கு நாமல் ராஜபக்ஷ முயற்சிக்கிறார்.

செய்யவேண்டிய சகல பாவங்களையும் செய்துவிட்டு, செய்த பாவங்களை சரிசெய்துவிட முடியாது என்பதை நாமல் கவனத்திற்கொள்ள வேண்டும். நாமல் உள்ளிட்டோர் செய்த தவறான ஆலோசனைகளின் பிரதிபலன்களையே முழு நாட்டு மக்களும் அனுபவித்து வருகிறார்கள். அதனால், இந்த பிரச்சினைகளை எங்களால் பொறுப்பேற்க முடியாது. அதேபோன்று, அன்று நாங்கள் கூறியவற்றை செய்திருந்தால் இன்றைய நிலை ஏற்பட்டிருக்காது என்பதையும் நாமல் நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும் என்று குறிப்பிட்டுள்ளார்.

அரசியல் வேறுபாடுகளுக்கு...

புரிந்துணர்வுடனும், நல்லெண்ணத்துடனும் செயற்படுவதற்கு நான் தயாராக உள்ளேன்" - இவ்வாறு நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச் செயலாளருமான ஜீவன் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் ஊடகங்களுக்கு நேற்று (02) அறிக்கையொன்றை அவர் வெளியிட்டுள்ளார்.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

அழைப்பு விடுத்தால் அதனை ஏற்றுக்கொண்டு செல்வதுதான் நாகரிகம். நாம் அனைவரும் ஒரு தாயின் பிள்ளைகள் என்ற உணர்வு எமக்குள் இருக்கவேண்டும். நான் குறித்த நிகழ்வில் பங்கேற்றது தொடர்பில் பலருக்கு பலவித வேறுபட்ட உணர்வுகள் இருக்கலாம். ஆனால், எமது சமூகத்தை முன்னேற்றுவதற்கு ஒன்றிணைந்த வேலைத்திட்டம் அவசியம் என்பதை நாம் மறக்கலாகாது. அதற்கான ஆரம்பமே இதுவாகும்.

இதேவேளை, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச மற்றும் பழனி திகாம்பரம் ஆகியோருடன் இணைந்து அரசியல் செய்வதற்காக அந்நிகழ்வில் நான் கலந்துகொள்ளவில்லை. மாறாக, புரிந்துணர்வுடன் கூடிய மலையக அரசியல் ஒருமைப்பாட்டுக்காகவே கலந்துகொண்டேன்.

நான் அரசியல் களத்தில் பயணிக்க ஆரம்பித்த காலந்தொட்டு எத்துறையைச் சார்ந்த அரசியல், தொழிற்சங்கம், பல்துறையைச் சார்ந்தவர்களுக்கு மதிப்பளித்து அவர்களுடைய அனுபவங்களையும், துறைசார்ந்த நிபுணத்துவத்தையும் மதிப்பளித்து நடந்துகொள்வதுதான் அணுகுமுறையாக பார்க்கின்றேன். அந்தவகையில் எதிர்காலத்திலும் இவ்வாறான மூத்த அனுபவமிக்கவர்களுடன் கைகோர்த்து பயணிப்பதே எனது இலக்காகும்.

வெறுப்பையும் எதிர்ப்பையும் வைத்து இனிமேலும் அரசியல் செய்யமுடியாது. அவ்வாறான அரசியல் பிளவுகொண்ட அரசியல் போக்கில் நாம் நீடித்துச் செல்ல முடியாது என்பது எனது குறுகியகால அரசியல் வாழ்வில் நான் கற்றுக்கொண்ட அனுபவமாகும். அன்பினாலும் நல்லிணக்கப்பாட்டினாலுமே எமது மக்களுக்கான நன்மைகள் சாத்தியப்படும்.

அன்றைய சந்திப்பின்போது மலையக அரசியல் கட்சிகளுக்கிடையே அரசியல் ரீதியாக ஒற்றுமை இல்லாவிட்டாலும் அக்கட்சிகள் அனைத்தும் புரிந்துணர்வோடு செயற்படுவதற்கு இணக்கம் தெரிவித்துள்ளன. அவ்வாறே இ.தொ.காவின் பொதுச் செயலாளர் என்ற ரீதியில் மலையக மக்களின் நலன்சார்ந்த எல்லா விடயங்களிலும் இணக்கப்பாட்டுடன் பயணிக்க நான் தயாராகவுள்ளேன்.

அதேபோன்று மலையக அரசியல் கட்சிகளுக்கிடையே கருத்து வேறுபாடுகள் தோன்றும் பட்சத்தில், நாம் முட்டிமோதிக்கொள்ளாமல் ஆரோக்கியமான முறையில் எங்கள் வழியில் பயணிப்போம்.

அத்தோடு நான் தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைமை காரியாலய திறப்பு விழா நிகழ்வில் கலந்துகொண்டமையானது கட்சி பேதமின்றி அனைத்து இளைஞர்கள் மத்தியிலும் வரவேற்பையும், நல்லிணக்கத்தையும் வெளிப்படுத்துகின்றது. ஆகவே, இளைஞர்களாகிய நீங்கள் இவ்விடயத்தை மக்களின் எதிர்காலத்தை மனதில்கொண்டு நல்லெண்ணத்துடன் எமது மக்கள் மத்தியில் கொண்டுசெல்வீர்கள் என நம்புகின்றேன் - எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குளியலறை சாதனங்கள் இறக்குமதி செய்வதைத் தற்காலிகமாக இடைநிறுத்தும் வர்த்தமானி அறிவித்தலுக்கு அனுமதி வழங்குவதா?

இது நுகர்வோருக்கு இழைக்கும் அநீதி – அரசாங்க நிதி பற்றிய குழு

1969ஆம் ஆண்டின் முதலாம் இலக்க ஏற்றுமதி மற்றும் இறக்குமதி (கட்டுப்பாட்டுச்) சட்டத்தின் கீழான ஒழுங்குவிதிகள் குறித்த 2296/30ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்களை அனுமதிப்பதற்கு முன்னர் இது தொடர்பில் மேலும் விரிவான கலந்துரையாடல்கள் நடத்தப்பட வேண்டும் என்றும், இதற்கு அனுமதி வழங்கினால் நுகர்வோருக்கு அநீதி இழைக்கப்படுகிறதா என்பது குறித்து ஆராயப்பட வேண்டியிருப்பதாகவும் அரசாங்க நிதி பற்றிய குழுவில் கவனம் செலுத்தப்பட்டது.

அரசாங்க நிதி பற்றிய குழு அதன் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ த சில்வா தலைமையில் நேற்று முன்தினம் (01) கூடியபோதே இவ்விடயம் தொடர்பில் ஆராயப்பட்டது.

இந்த வர்த்தமானிப் பத்திரிகையின் ஊடாக குந்தியிருந்து மலங்கழிக்கும் பாத்திரம் (Squatting pans), ஸெரோவ் ஸேன் (sink) உள்ளிட்ட குளியலறை சாதனங்கள் இறக்குமதி செய்யப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. மேலும், இந்த வர்த்தமானியின் ஊடாக டைல்ஸ் இறக்குமதி தற்காலிகமாக இடைநிறுத்தப்படுவதன் ஊடாக சந்தையில் ஏற்படக்கூடிய ஏகபோக உரிமை மற்றும் இறக்குமதி இடைநிறுத்தப்பட்டுள்ள சூழ்நிலையில் டைல்ஸ் உள்ளிட்ட குளியலறை சாதனங்களின் விலைகள் நியாயமற்ற முறையில் நுகர்வோருக்கு அதிகரிக்கப்படுகின்றமை போன்று, கேள்விக்கு ஏற்ற உற்பத்தி இல்லாமல் போகின்றமை குறித்த விடயங்கள் குழுவின் கவனத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட்டன. இவ்விடயம் தொடர்பில் அறிக்கையொன்றை சமர்ப்பிக்குமாறு நிதி அமைச்சுக்கு குழு, பணிப்புரை விடுத்தது.

2298/55ஆம் இலக்க விசேட வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்ட ஏற்றுமதி மற்றும் இறக்குமதி (கட்டுப்பாட்டுச்) சட்டத்தின் கீழான ஒழுங்குவிதிகள் குறித்தும் இங்கு ஆராயப்பட்டதுடன், இதற்கு அனுமதியும் வழங்கப்பட்டது. இந்த வர்த்தமானி அறிவித்தலின் ஊடாக வெளிநாட்டுக்குச் சென்ற பணியாளர் நாட்டுக்கு அனுப்பும் பணத்தின் பெறுமதிக்கு அமைய இலத்திரனியல் மோட்டார் வாகனத்தை இறக்குமதி செய்ய அனுமதி வழங்கப்படும்.

2297/79ஆம் இலக்க விசேட வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்ட ஏற்றுமதி மற்றும் இறக்குமதி (கட்டுப்பாட்டுச்) சட்டத்தின் கீழான ஒழுங்குவிதி குறித்தும் அரசாங்க நிதி பற்றிய குழுவினால் கவனம் செலுத்தப்பட்டது. இதன் ஊடாக அத்தியாவசியப் பொருட்கள் திறந்த கணக்கின் மூலம் பெற்றுக்கொள்ளப்படும் காலம் நீடிக்கப்படுகிறது.

அத்துடன் கடந்த இரண்டு வருட காலத்திற்குள் இறக்குமதி செய்யப்பட்ட அரிசி, சோளம் உள்ளிட்ட ஏனைய பொருட்களின் அளவு எவ்வாறு தீர்மானிக்கப்பட்டது என்பது தொடர்பில் குழு கவனம் செலுத்தியது.

தேவைக்கு அதிகமாக அரிசி இறக்குமதி செய்யப்பட்டு அது கலப்படம் செய்யப்பட்ட பின்னர் மீண்டும் விற்பனை செய்யப்படுவது தொடர்பில் குழுவின் கவனத்துக்கு கொண்டுவரப்பட்டதுடன், கால்நடைத் தீவன உற்பத்திக்கான மூலப்பொருட்களை இறக்குமதி செய்வதில் சிக்கல் உள்ளதால் முட்டை, கோழிப்பண்ணை தொழில் கடும் நெருக்கடிக்கு உள்ளாகி வருவதாகவும், இதனால் கோழி இறைச்சி மற்றும் முட்டைகளின் விலை அதிகரித்திருப்பதாகவும் குழுவில் கலந்துரையாடப்பட்டது.

இந்த நிலைமைகள் குறித்து ஆராயும்போது சரியான மற்றும் அடிப்படையான தகவல்கள் ஏதும் இல்லாமை குறித்து தனது அதிருப்தியை வெளிப்படுத்திய குழு, இது தொடர்பான தெளிவான தரவுகள் அடங்கிய அறிக்கையை 02 மாத காலத்திற்குள் தம்மிடம் சமர்ப்பிக்குமாறும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்குப் பரிந்துரைத்தது.

2023ஆம் ஆண்டுக்கான ஒதுக்கீட்டுச் சட்டமூலம் தொடர்பில் அரசாங்க நிதி பற்றிய குழு கலந்துரையாடியதுடன், இம்முறை முன்வைக்கப்பட்ட மதிப்பீடுகள் தொடர்பில் நிதியமைச்சு எந்தளவு நம்பிக்கையுடன் உள்ளது என குழு உறுப்பினர்கள் கேள்வி எழுப்பினர். இந்த வரவு-செலவுத்திட்டத்தில் குறைந்த வருமானம் பெறும் தரப்பினர் குறித்து அதிக கவனம் செலுத்தப்பட வேண்டியதன் அவசியத்தையும் குழு வலியுறுத்தியது.

இக்கூட்டத்தில் இராஜாங்க அமைச்சர்களான ஷெஹான் சேமசிங்க, கலாநிதி சுரேன் ராகவன், நாடாளுமன்ற உறுப்பினர்களான அனுர பிரியதர்ஷன யாப்பா, சந்திம வீரக்கொடி, பேராசிரியர் ரஞ்சித் பண்டார, பிரேம்நாத் சி. தொலவத்த, மதுர விதானகே ஆகியோரும் அரசாங்க அதிகாரிகளும் கலந்துகொண்டனர்.

உள்ளூராட்சி சபைகளுக்கிடையிலான போட்டியில் மூன்றாமிடத்தைப் பெற்ற அக்குறணை பிரதேச சபை

மத்திய மாகாண ஆளுநர் லலித் யூ கமகே பாராட்டு

(இக்பால் அலி)

உள்ளூராட்சி மன்ற சபைகளுக்கிடையிலான போட்டியில் அக்குறணை பிரதேச சபை மூன்றாமிடத்தை அகில இலங்கை மட்டத்தில் பெற்றுக் கொள்வது சாதாரண விடயமல்ல. இப்பிரதேச சபை பல்லின மக்களுக்கிடையே ஒற்றுமையை வளர்ப்பதிலும் பிரதேசத்தின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதிலும் முன்னணி மிக்க ஒரு பிரதேச சபையாக விளங்கியமையாலேயே கடந்த 2020 ஆம் ஆண்டுக்கான போட்டியில் மூன்றாமிடத்தைப் பெற்றுக் கொண்டது என்று மத்திய மாகாண ஆளுநர் லலித் யூ கமகே தெரிவித்தார்.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றும்போதே மத்திய மாகாண ஆளுநர் லலித் யூ கமகே இவ்வாறு தெரிவித்தார்.

2020இல் நடத்தப்பட்ட உள்ளூராட்சி மன்ற சபைகளுக்கிடையிலான போட்டியில் அக்குறணை பிரதேச சபை அகில இலங்கை மட்டத்தில் மூன்றாமிடத்தைப் பெற்றுக் கொண்டதையடுத்து நடத்தப்பட்ட பாராட்டு வைபவம் மாத்தளை க்ராண்ட் மவுண்ட் ஹோட்டலில் அக்குறணை பிரதேச சபைத் தவிசாளர் இஸ்திஹார் இமாமுதீன் தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் மத்திய மகாண உள்ளூராட்சி மன்ற ஆணையாளர், மாத்தளை நகர முதல்வர் அக்குறணை பிரதேச செயலாளர், அக்குறணை பிரதேச சபை உறுப்பினர்கள், பிரதேச சபை உத்தியோகத்தர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

அச்சுவேலியில் தொடரும் வழிப்பறி; பெண்களிடம் கத்தி முனையில் வழிப்பறி!

யாழ்ப்பாணம், அச்சுவேலி பகுதியில் மூன்று பெண்களிடம் வழிப்பறிக் கொள்ளையர்கள் கத்தி முனையில் நகைகளைக் கொள்ளையடித்து சென்றுள்ளனர்.

அச்சுவேலி வைத்தியசாலை வீதியில் நடந்து சென்ற மூன்று பெண்களிடம் மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் விலாசம் கேட்பது போன்று பாசாங்கு செய்து, திடீரென கத்தியை காட்டி மிரட்டி நகைகளை கொள்ளையடித்து தப்பிச் சென்றுள்ளனர்.

இதன்போது பெண்ணொருவரின் தோட்டைக் கழற்ற முயற்சித்து, அதனைக் கழற்ற முடியாத நிலையில், பெண்ணின் காதில் இருந்து பிடுங்கி எடுத்துள்ளனர். அதனால் அப்பெண்ணின் காதில் காயம் ஏற்பட்ட நிலையில், அச்சுவேலி வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுள்ளார். இதேவேளை கொள்ளையடித்து செல்லப்பட்ட நகைகளில் ஒரு நகை கவரிங் எனவும் தெரிவிக்கப்பட்டது.

இச்சம்பவம் தொடர்பில் அச்சுவேலி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

சபாநாயகர் மஹிந்த யாப்பாவைச் சந்தித்தார் இலங்கைக்கான தென்னாபிரிக்க உயர்ஸ்தானிகர்

இலங்கைக்கான தென்னாபிரிக்க உயர்ஸ்தானிகர் ஸன்டெல் எட்வின் ஷால்க், சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தனவை அண்மையில் நாடாளுமன்றத்தில் சந்தித்தார்.

இச்சந்திப்பில் நாடாளுமன்ற செயலாளர் நாயகம் தம்மிக தசநாயக்கவும் கலந்துகொண்டிருந்தார்.

இலங்கை - தென்னாபிரிக்க நாடாளுமன்ற நட்புறவு சங்கத்தின் ஊடாக இரு தரப்பு விஜயங்களையும் அதிகரிக்க முடியுமென உயர்ஸ்தானிகர் சுட்டிக்காட்டினார். இந்தக் கருத்துடன் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவும் இணங்கினார்.

பல்வேறு விடயங்களில் தென்னாபிரிக்காவின் அனுபவங்களைப் பகிர்ந்துகொண்ட இலங்கைக்கான தென்னாபிரிக்க உயர்ஸ்தானிகர், தனது நாட்டின் உண்மையைக் கண்டறியும் குழு வெற்றியளிப்பதற்கு தென்னாபிரிக்க அதிகாரிகள் எடுத்த நடவடிக்கைகள் குறித்தும் விளக்கமளித்தார்.

ஆணைக்குழு அமைக்கப்படுவதற்கு முன்னர் அதில் பங்களிக்கவிருக்கும் குழுவினருக்கிடையில் இறுதி இணக்கப்பாட்டை எட்டுவது குறித்து பல்வேறு தரப்பினரின் கருத்துகளைப் பெற்றுக் கொள்ளும் வகையில் ஆரம்பகட்ட கலந்துரையாடல்கள் நடத்தப்பட்டதாகவும் அவர் சுட்டிக்காட்டினார். இதனூடாக அனைத்துத் தரப்பினரதும் முழுமையான ஒத்துழைப்புடன் ஆணைக் குழுவை முன்னெடுத்துச் சென்று அதில் வெற்றியடைய முடிந்ததாகவும் தெரிவித்தார்.

அத்துடன், இரு நாட்டுக்கும் இடையில் பரஸ்பர விடயங்கள் குறித்துக் கருத்துப் பரிமாற்றமும் இடம்பெற்றது.

கடற்படை முகாமில் சடலம் மீட்பு

யாழ்ப்பாணம் காங்கேசன்துறை கடற்படை முகாமிலிருந்து கடற்படை சிப்பாயின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

கண்டியை சேர்ந்த சன்னி அப்புக்கே சுரங்க ரொஷாந்த சில்வா (வயது 34) எனும் சிப்பாயே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் தொடர்பில் காங்கேசன்துறை பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ள நிலையில், சடலம் உடல்கூற்று பரிசோதனைக்காக தெல்லிப்பளை வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

மன்னார் தரவன்கோட்டை பிரதான வீதியை செப்பனிடுமாறு கோரி மக்கள் போராட்டம்

(மன்னார் நகர் நிருபர்)

மன்னார் தாழ்வுபாடு பிரதான வீதி, எழுத்தூர் சந்தியில் இருந்து தரவன்கோட்டை கிராமத்திற்குச் செல்லும் பிரதான வீதியை உரிய முறையில் செப்பனிட்டுத் தருமாறு கோரி குறித்த கிராம மக்கள் நேற்று புதன்கிழமை மு.ப. 11.45 மணியளவில் வீதியை மறித்து போராட்டத்தில் ஈடுபட்டனர்.

குறித்த மக்கள் எழுத்தூர் சந்தியில் இருந்து தாழ்வுபாடு பிரதான வீதியை மறித்து போராட்டத்தில் ஈடுபட்டனர். இதனால் பகல் 12.30 மணி வரை குறித்த பிரதான வீதியூடாக போக்குவரத்து தடைப்பட்டிருந்தது.

இந்த நிலையில், மன்னார் உதவி பிரதேச செயலாளர் சம்பவ இடத்திற்கு வந்து மக்களுடன் கலந்துரையாடலில் ஈடுபட்டார்.

இந்த நிலையில், மக்கள் ஆர்ப்பாட்டத்தை கைவிட்டு தமது பிரச்சினைகளை உதவி பிரதேச செயலாளரிடம் தெரிவித்தனர்.

மேலும், குறித்த வீதி தொடர்பாக அங்கு வருகை தந்த மன்னார் நகர சபை உறுப்பினர் மைக்கல் கொலின் உதவி பிரதேச செயலாளரிடம் சில விடயங்களை முன்வைத்தார்.

குறித்த வீதி மன்னார் நகரசபைக்கு உட்பட்டதாக காணப்படுகின்றது. எனினும், குறித்த வீதி முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் ஆட்சியின்போது நடைமுறைப்படுத்தப்பட்ட ஒரு கிலோ மீற்றர் வீதி அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் மன்னார் மாவட்டத்தில் பல வீதிகள் அபிவிருத்தி திட்டத்திற்கு உள்வாங்கப்பட்டன.

இதன்போது அபிவிருத்திக் குழுவின் தலைவராக இருந்த நாடாளுமன்ற உறுப்பினர் காதர் மஸ்தான் ஊடாக பல வீதிகளுக்கான அபிவிருத்திப் பணிகள் இடம்பெற்றன.

இதன் அடிப்படையில் குறித்த வீதி தனியார் ஒப்பந்ததாரரிடம் அபிவிருத்திப் பணிக்கு கையளிக்கப்பட்டது.

குறித்த வீதி மன்னார் வீதி அபிவிருத்தி அதிகார சபையூடாக அபிவிருத்திப் பணிகள் முன்னெடுக்கப்பட்டன.

இந்த நிலையில், குறித்த வீதி ஒப்பந்ததாரருக்கு ஒரு தொகை பணம் வழங்கப்பட்டது. மிகுதி பணம் வழங்கப்படவில்லை.

இதனால் குறித்த ஒப்பந்ததாரர் குறித்த பணியை இடைநிறுத்தினார். இந்த நிலையில், குறித்த வீதியின் நிலை தொடர்பாக அப்பகுதி மக்கள் மன்னார் நகர சபையிடம் முறையிட்டனர்.

மன்னார் நகர சபை பல்வேறு கூட்டங்களில் மன்னார் வீதி அபிவிருத்தி அதிகார சபையிடம் குறித்த வீதி தொடர்பாகவும் குறித்த வீதியை முழுமையாக்கி தருமாறும் கோரி இருந்தது. எனினும், எவ்வித பதிலும் வழங்கப்படவில்லை.

குறித்த வீதியை செய்ய முடியாது இருந்தால் எழுத்து மூலம் சமர்ப்பிக்கும் படியும், குறித்த வீதியை நகரசபை செப்பனிடுவதாகவும் தெரிவித்திருந்தனர்.

எனினும், சபையில் தீர்மானம் எடுக்கப்பட்ட போதும், குறித்த வீதியை செப்பனிட மன்னார் வீதி அபிவிருத்தி அதிகார சபை மன்னார் நகரசபைக்கு எழுத்து மூலம் கடிதம் சமர்ப்பிக்கப்படவில்லை என சம்பவ இடத்திற்கு வருகை தந்த மன்னார் நகர சபை உறுப்பினர் மைக்கல் கொலின் தெரிவித்தார்.

மக்களின் பிரச்சினையை கேட்டறிந்த மன்னார் உதவி பிரதேச செயலாளர் துரித நடவடிக்கைகள் மேற்கொள்வதற்கும், எதிர்வரும் வெள்ளிக்கிழமை குறித்த கிராமத்தைச் சேர்ந்தவர்கள், மன்னார் நகர சபை மற்றும் மன்னார் வீதி அபிவிருத்தி அதிகார சபை அதிகாரிகள் ஆகியோரை அழைத்து தீர்மானித்து உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுவதாகவும் தெரிவித்தார்.

நீதிபதிகள் சங்கத்தின் தலைவராக இளஞ்செழியன்



இலங்கை மேல் நீதிமன்ற நீதிபதிகள் சங்கத்தின் தலைவராக நீதிபதி மா.இளஞ்செழியன் தெரிவுசெய்யப்பட்டுள்ளார். கடந்த 26ஆம் திகதி புதன்கிழமை அன்று, போட்டியின்றி ஏகமனதாக அவர் தெரிவுசெய்யப்பட்டார். இந்தத் தலைவர் பதவியைப் பெற்றுக் கொள்ளும் முதலாவது தமிழர் என்ற பெருமையையும் அவர் பெற்றுக் கொண்டுள்ளார்.

மாவீரர்களை நினைவுகூரும் கார்த்திகை மாதம் ஆரம்பமாகியுள்ள நிலையில், யாழ். பல்கலையில் அமைப் பெற்றுள்ள மாவீரர் நினைவுத்தூபி வளாகம் யாழ். பல்கலைக்கழக மாணவர்களால் நேற்று செவ்வாய்க்கிழமை சிரமதானம் மூலம் துப்புரவு செய்யப்பட்டது. இதனைத் தொடர்ந்து மாணவர்களால் மாவீரர் நினைவுத்தூபிக்கு ஆத்மார்த்த ரீதியாக மலரஞ்சலி செலுத்தப்பட்டது. இதன்போது அதிகளவான மாணவர்கள் நினைவேந்தலில் பங்கெடுத்தமை குறிப்பிடத்தக்கது.

வெற்றி நிச்சயம்

"உங்கள் பிரச்சினை எதுவானாலும் ஒருமுறை என்னைத் தொடர்புகொண்டால் 100% வெற்றி நிச்சயம்." நடக்காத காரியங்களையும் நடத்தி வைக்கும் சக்தி என்னிடம் மட்டுமே உண்டு. என்னை நம்புங்கள். பணப் பிரச்சினை, தொழில் முடக்கம், வியாபார மந்தம், கடன், முன்னேற்றத்தடை, எதிலும் தோல்வி, தீராத நோய், போதைவஸ்துப்பாவனை, வழக்கு, விற்கப்படாத வீடு/காணி, வாகனம் விற்க, வெளிநாடு செல்ல,கொடுத்த பணம் திரும்பிவர, கணவன்-மனைவி பிரச்சினை, விவாகரத்தை தடுக்க, காதல், மனங்கவர்ந்தவரை வசமாக்கிக்கொள்ள, பிரிந்தவர் ஒன்றுசேர, திருமணத்தடை, குழந்தையின்மை மற்றும் உங்கள் சகல பிரச்சினைகளுக்கும் 48 மணித்தியாலத்திற்குள் 100% நிரந்தரத்தீர்வு. இது சத்தியம்.

உலகப்புகழ் பெற்றவரும் இலங்கையில் நம்பர்-1 மலையாள மாந்திரீக ஜாம்பவான், மனோதத்துவ நிபுணர், தத்துவஞானி, மகரிஷி, தேசபந்து கௌரவ கலாநிதி ஸ்ரீமத் சுவாமிஜி -0710192687

eba jb . h t hh

தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

இல. 91, விஜேராம யாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42,
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 077 172 1880
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com

2022, நவம்பர் 03ஆம் திகதி, வியாழக்கிழமை

பசிக்கொடுமைக்கு முற்றுப்புள்ளி தேவை

சர்வதேச நிறுவனங்கள் அடிக்கடி ஆய்வுகளை வெளியிடுவதும், அவை பரபரப்பை ஏற்படுத்துவதும் வழக்கமாகிவிட்டன. பெரும்பாலான ஆய்வுகள் தவறாக இருப்பதால், நாடுகளை தவறாக சித்தரிப்பதால் அந்த ஆய்வுகள் நம்பகத்தன்மை இழக்கின்றன.

இப்போது 2022 ஆம் ஆண்டுக்கான "உலகப் பசிக் குறியீடு" (வேர்ல்ட் ஹங்கர் இன்டெக்ஸ்) ஆய்வுக்குட்படுத்தப்பட்ட 121 நாடுகளின் பட்டியலில், இலங்கைக்கு 64ஆவது இடத்தை வழங்கியிருக்கிறது. போரால் பாதிக்கப்பட்டிருக்கும் உக்ரைன் 36ஆவது இடத்திலும், நமது அண்டை நாடுகளான நேபாளம் (81), வங்கதேசம் (84), பாகிஸ்தான் (99) இந்தியா (107) இடங்களிலும் உள்ளன.

"பசிக் குறியீடு" என்கிற தலைப்பே அபத்தமானது. பரபரப்பை ஏற்படுத்துவதற்காக வைக்கப்பட்டுள்ளது என்பதாகவே அதனை கருத வேண்டியுள்ளது. அதன் கேள்வியும், அளவுகோலும் பசியல்ல, வறுமையும் அல்ல. குழந்தைகளின் ஊட்டச்சத்துக் குறைவு, வளர்ச்சியின்மை, குழந்தைகள் மரணம் ஆகியவற்றின் அடிப்படையிலும், உணவுப் பாதுகாப்பு சார்ந்தும் எடுக்கப்படும் புள்ளிவிவரங்களுக்கு "பசிக் குறியீடு" என்று தலைப்பு வைப்பதிலேயே, நேர்மையின்மை வெளிப்படுகிறது.

ஐந்து வயதுக்குக் குறைவான குழந்தைகளின் இறப்பு விகிதத்தின் அடிப்படையிலும், ஊட்டச்சத்துக் குறைவின் அளவுகோலிலும் ஒட்டுமொத்த மக்கள்தொகையையும் கணிப்பது எங்ஙனம் சரியாகும் என்பது தெரியவில்லை.

உலகப் பசிக் குறியீடு நமக்குச் சில பாடங்களை உணர்த்துகிறது. பத்திரிகை சுதந்திரம், ஜனநாயகம், மனித உரிமை உள்ளிட்ட பிரச்சினைகளில் ஏனைய நாடுகளுடன் ஒப்பிடும்போது, இலங்கை விமர்சிக்கப்படுவதற்கு நம்மிடம் போதிய புள்ளிவிவரங்கள் இல்லாமல் இருப்பதுதான் காரணம்.

அரச புள்ளிவிவர திணைக்களம் என்று ஓர் அமைப்பு இருக்கிறது. அந்த அமைப்பு திரட்டும் புள்ளிவிவரங்கள் பெரும்பாலும் கடமைக்காக எடுக்கப்படுபவையாகவும், ஆட்சியாளர்களை திருப்திப் படுத்துபவையாகவுமே இருக்கின்றன. சர்வதேச புள்ளிவிவரங்களை எதிர்கொள்ளவோ, மறுதலிக்கவோ நம்மிடம் புள்ளிவிவரங்கள் இல்லாமை மிகப் பெரிய பலவீனம். கடந்த பல வருடங்களாகவே நாட்டில் மக்களுக்கு இந்த பொருளாதாரத் துயர் எவ்வாறு வந்தது, எதனால் வந்தது என்று ஆராய்வோமானால் அதனை சரியாக கணிக்கும் தரவுகள் இல்லை.

வறுமை நிலைமை இலங்கையில் இப்போதைக்கு முடிவுறும் நிலையில் இல்லை. "நெருப்பினுள் துஞ்சலும் ஆகும் நிரப்பினுள் யாதொன்றும் கண்பாடு அரிது" என வறுமையின் கொடூரத்தை வள்ளுவர் அன்றே அழகாக கூறிவிட்டார். ஒருவனால் நெருப்பில் கூட கண் அயர்ந்து உறங்க முடியும். ஆனால், அவனை வறுமை சூழ்ந்துகொண்டால், எந்த வகையிலும் அவனால் கண்மூடி உறங்க முடியாது என்பதே இந்தக் குறளின் பொருளாகும். அந்தளவுக்கு வறுமை என்பது மிகக் கொடூரமானதாகும்.

உலகில் ஏற்கனவே எண்ணிலடங்காதவர்கள் வறுமையால் செத்து மடிந்து விட்டார்கள். வறுமை என்பது தேசிய பிரச்சினையை தாண்டி சர்வதேச பிரச்சினையாக மாறியுள்ளது. நெருக்கடியான காலகட்டம் சுய உற்பத்தியை ஊக்குவிக்க வேண்டும் என்பதோடு, உற்பத்தி பொருளாதாரத்தின் முக்கியவத்துத்தை எமக்கு உணர்த்தியுள்ளது. கிராமங்களில் தன்னிறைவு சூழல் என்ற முறைமையை சரியாக கட்டமைக்க வேண்டும். நீர் நிலத்தை அதிகமாக கொண்ட எமது நாட்டில் உற்பத்தி பொருளாதாரத்தை முன்னெடுக்க வேண்டும். இதன் மூலமே வறுமை பிடிக்குள் இருந்து மக்களை மீட்டு வாழ்வாதாரத்தை சிறப்பாக்க முடியும். இதனோடு விவசாயம், பண்ணை உற்பத்தி, மீன்பிடி போன்றவற்றையும் ஊக்குவிக்க வேண்டும்.

உலக வங்கியின் 2016 ஆம் ஆண்டு அறிக்கையின் பிரகாரம் யுத்தம் முடிவடைந்த பகுதிகளிலேயே அதிகளவு வறுமை காணப்படுகின்றது. இந்த வறுமையைப் போக்க அபிவிருத்தி இடைவெளியை நிரப்ப வேண்டிய கடப்பாடு உள்ளது. அபிவிருத்திகளை முன்னெடுக்காமல் இருப்பதால்தான் இன்று வறுமையை எதிர்கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

குறிப்பாக வறுமைக் கோட்டின் கீழ் உள்ள பத்து மாவட்டங்களில் முதல் மூன்று இடங்களில் முல்லைத்தீவும், கிளிநொச்சியும் காணப்படுகின்றன. எட்டாவது மாவட்டமாக யாழ்ப்பாணம் உள்ளது. இதில் 40 வீதமானவர்கள் விவசாயம், மீன்பிடித் தொழிலை நம்பி வாழ்கின்றவர்கள். இவர்களுக்கு மாற்று திட்டங்களை பெற்றுக்கொடுத்திருந்தால் நிலைமை சீராக இருந்திருக்கும் என்ற யதார்த்தத்தையும் இங்கு சுட்டிக்காட்டவேண்டியுள்ளது.

இலங்கையை பொறுத்தவரையில் 45 இலட்சம் பேர் மாத சம்பளத்தை உரிமையோடு எதிர்பார்க்க முடியாத நிலைமையில் வாழ்பவர்கள் ஆவர். 20 இலட்சம் பேர் நாள் சம்பளத்தை நம்பி வாழ்வாதாரத்தை கொண்டு செல்பவர்கள். யுத்தத்தால் வடக்கு-கிழக்கில் 85 ஆயிரத்துக்கு மேற்பட்ட விதவைகள் காணப்படுகின்றனர்.

மலையக மக்களின் வாழக்கையை விவரிக்க முடியாத கொடுமை. இதுபோன்று ஒவ்வொரு பிரிவு மக்களும் வறுமை என்னும் பிடியில் சிக்குண்டுள்ளார்கள். மக்கள் பிரதிநிதிகள் தம் மக்கள் தொடர்பில் முறையான வேலைத்திட்டங்களை எடுப்பதோடு, பொறுப்புடன் செயற்பட வேண்டும். வாய்ப்பேச்சு வீரர்களாக மாத்திரம் இருந்து விடக்கூடாது. பசிக்கொடுமைக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டியது அனைவரின் முன்னுள்ள பெரும் பொறுப்பாகும்.

போதைப்பொருளை முற்றாகத் தவிர்ப்போம்!

எம்.இராமச்சந்திரன்

மனிதன் வெறுத்து ஒதுக்க வேண்டியவற்றுள் மிக முக்கியமான ஒன்று போதைப் பழக்கமாகும். போதைப் பொருட்களால் தனிமனித வாழ்வு சீரழிவதோடு, நாட்டின் பொருளாதாரமும் சீர்குலைகிறது. இதனால் போதைப்பொருட்களை ஒழிப்பதற்கு உலக நாடுகளின் அரசுகள் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகின்றன. ஆனாலும், போதைப்பொருட்களின் ஊடுருவல் வேரறுக்க முடியாத விருட்சமாக வளர்ந்து வருகிறது.

மூளையை மழுங்கச் செய்து, புத்தியைத் தடுமாறச் செய்யும் ஒருவித கிறக்கமே போதை. இந்தப் போதையில் ஒருவித சுகம் கிடைப்பதாகச் சிலர் எண்ணுகின்றனர். இவர்கள் விளக்கில் விழும் வீட்டில் பூச்சிகளாக வாழ்வைத் தொலைக்கின்றனர். உண்மையில் போதை தருவதாக நினைக்கும் அற்ப சுகம் பெரும் அழிவுக்குக் கொண்டு செல்வதை அவர்கள் உணர்வதில்லை.

இளையோர் முதல் முதியோர் வரை போதைப் பழக்கத்திற்கு அடிமையாகிச் சீரழிவதை இப்போது காண முடிகிறது. மது, கஞ்சா, புகையிலை, அபின், பிரவுன் சுகர், போதைப்பாக்கு, குட்கா, பான்பராக் என்று போதைப் பொருட்களின் பட்டியல் மிக நீண்டது.

"ஈன்றாள் முகத்தேயும்
இன்னாதால் என்மற்றுச் சான்றோர்
முகத்துக் களி"

என்பது வள்ளுவர் குறள். 'போதைக்கு அடிமையானவனைப் பெற்ற தாய் கூட மதிக்க மாட்டாள். அப்படியிருக்க சான்றோர்கள் என்னும் பெரியோர் எப்படி மதிப்பார்கள்' என்பது இதன் பொருள். இதன்மூலம் போதை ஒழிக்கப்பட வேண்டிய ஒன்று என்ற நம் முன்னோர் கருத்து புலனாகும்.

பாடசாலை மாணவர்கள் மத்தியில் போதைப் பழக்கம் அதிகரித்து வருவது வேதனை தரும் விடயமாகும். போதையினால் வகுப்பில் மாணவர்கள் ஆட்டம் போடுவது, ஆசிரியரை அவமானப் படுத்துவது போன்ற அவலங்கள் இப்போது கல்வி நிலையங்களில் அரங்கேறி வருகின்றன. பெண்களும் கூட போதைக்கு அடிமையாவதைக் காணமுடிகிறது.

வருங்காலத் தலைவர்களாகக் கருதப்படும் மாணவர்கள் போதைப் பழக்கத்திற்கு அடிமையானால் நாட்டின் எதிர்காலம் என்னாவது? மாணவர்கள் மட்டுமல்ல, ஆசிரியர்களும் போதையில் வகுப்புக்கு வருகிறார்கள். இதை என்ன சொல்வது? வெட்கித் தலை குனிவதைத் தவிரவேறு என்ன செய்ய முடியும்? வேலியே பயிரை மேய்ந்தால் விளைச்சல் என்னாவது?

பாடசாலைகள், பஸ் நிலையங்கள் போன்ற பொது இடங்களைக் குறிவைத்து போதைப்பொருட்களின் இரகசிய விற்பனை பரவலாகி விட்டது. மேலும், கடைகளிலும் கூட போதைப் பாக்குத்தூள், பான்பராக் போன்றவை இரகசியமாக விற்பனையாகி வருகின்றன. இதற்கென்றே போதைப்பொருள் விநியோகிப்போர் பலர் உள்ளனர்.

பெரும்பாலான போதைப்பொருட்கள் வெளிநாட்டிலிருந்தே கடத்திவரப்படுகின்றன. விமான நிலையங்களிலும் சோதனைச் சாவடிகளிலும் மேற்கொள்ளப்படும் கடுமையான சோதனைகளையும் மீறி அவை உள்நாட்டுக்குள் இரகசியமாகப் பயணித்துவிடுகின்றன. அதற்கென கைதேர்ந்த கடத்தல்காரர்கள் உள்ளனர்.பணம் சம்பாதிப்பதை நோக்கமாகக் கொண்ட 'அறமற்ற வணிகமே' இதற்குக் காரணம். அறமற்ற வணிகம் சமுதாயப் பாவம் என்று காந்தியடிகள் கூறுவார். அந்த அறமற்ற வணிகம் இப்போது பெருகிவிட்டது. யார் எப்படிப் போனால் என்ன, எனக்குப் பணம் வேண்டும் என்ற மனநிலையே கடத்தல்காரர்களிடம் இருக்கிறது.

இந்த இரகசிய வியாபாரத்தால் குறுகிய காலத்தில் பெருந்தொகை சம்பாதிக்க முடிகின்றது.

போதைப்பொருள் தடுப்புக்காக அரசாங்கமும் அவ்வப்போது கடும் நடவடிக்கை எடுத்துத்தான் வந்திருக்கிறது. ஆனாலும், போதைப் பழக்கம் குறைந்தபாடில்லை.

அதற்கான முக்கிய காரணம் கடத்தல்காரர்களின் வலுவானநிலை முக்கியமானது. கடுமையான கண்காணிப்பின் மூலம் போதைப்பொருள் கடத்துபவர்களைக் கண்டறிய வேண்டும். போதைப்பொருளின் மூலத்தைக் கண்டறிந்து அதனை முளையிலேயே கிள்ளி எறிவதில் விழிப்புடன் செயல்படவேண்டும்.

உபயோகிப்பவரும் உற்பத்தியாளரும் குற்றவாளிகள்தான். ஆனாலும், முதல் குற்றவாளி உற்பத்தியாளரே. இதனை உணர்ந்து உற்பத்தியைத் தடுக்கும் விதமாகச் செயல்பட்டால் எல்லாம் சரியாகிவிடும். அபின், கஞ்சா, ஹெரோயின், பிரவுன் சுகர், போதைப்பாக்கு போன்றவை மட்டுமே போதைப்பொருட்கள் என்பது போல் இவை மட்டுமே பறிமுதல் செய்யப்படுகின்றன. மதுவும் போதைப்பொருள்தான் என்பது மறக்கடிக்கப்பட்டு வருகிறது.

அரசாங்கமே விற்பனை செய்வதால் மது போதைப்பொருள் இல்லை என்று ஆகிவிடாது. அதனை அரசே விற்பனை செய்துவிட்டு, மற்றவற்றுக்குத் தடைபோடுவது போதைப்பொருட்களை முற்றிலும் ஒழிக்கும் செயலாக இருக்க முடியாது.

மூளைத்திறனைப் பெருக்கும் சில்லு



ஸ்பேஸ் எக்ஸ் அதிபர் எலான் மஸ்க், மனித மூளைத் திறனைப் பெருக்கும் நியூராலிங்க் என்ற சில்லினை உருவாக்கி வருகிறார். நியூராலிங்க், ஒக்டோபரில் ஒரு காண்பி & சொல் நிகழ்ச்சியை நடத்தவிருந்தது. ஆனால், அதை மஸ்க், நவம்பர் மாதத்துக்குத் தள்ளி வைத்திருக்கிறார்.

இதனால், மிகப் பெரிய நியூராலிங்க் அறிவிப்பு வரக்கூடும் என்ற எதிர்பார்ப்பு எழுந்துள்ளது. மனித மூளைக்கும் கணினிக்கும் இடைமுகமாக நியூராலிங்க் என்ற ஒரு சில்லு செயல்படும். மனித மூளைக்குள் இதைப் பொருத்தவேண்டும் என்பதுதான் சர்ச்சைக்குரிய விடயம். ஆனால், ஏற்கனவே ஒரு குரங்கு மற்றும் பன்றியின் மூளையில் நியூராலிங்க் சில்லுகளை வெற்றிகரமாகப் பொருத்தியுள்ளனர்.

அல்சைமர்ஸ் போன்ற நரம்பு பாதிக்கப்பட்டோர், விபத்தில் அங்கக் கட்டுப்பாடுகளை இழந்தோர் போன்றோருக்கு நியூராலிங்க் சில்லு உதவும் என்கிறார் மஸ்க்.

ஆனால், மனித மூளைக்கும் கட்டற்ற வளர்ச்சியடைந்து வரும் செயற்கை நுண்ணறிவு கணினிக்கும் இடைமுகமாகவே நியூராலிங்க் சில்லு இருக்கும் என்று மஸ்க் சொல்கிறார். அதாவது, செயற்கை நுண்ணறிவு எல்லை மீறிப் போகாமல் இருக்க, நியூராலிங்க் சில்லைப் பொருத்திய மனிதர்கள் கடிவாளம் போடுவார்கள் என மஸ்க் நம்புகிறார்.

விசிறி இல்லாத காற்று மின்னாலை

கட்டடங்கள், வீடுகளின் கூரைகளின் மேல் வைக்க காற்றாலைகள் ஏற்றவை அல்ல என்ற நிலை வந்துவிட்டது. அவற்றின் விசிறிகள் கண்களை உறுத்தும் வகையில் சுற்றியபடியே இருப்பதும், விசிறிகளிலிருந்து வரும் ஓசை கிலி ஏற்படுத்துவதும்தான் காரணம்.

இந்தக் குறைகள் இல்லாத ஒரு காற்றாலையை அமெரிக்காவின் ஹியூஸ்டன் பல்கலைக்கழக விஞ்ஞானிகள் உருவாக்கியுள்ளனர்.

ஏரோமைன் என்கிற இக்காற்றாலை, சூரிய மின்பலகைகள் அளவுக்கு இடத்தை அடைக்காமல், சாதாரண விலைக்கே கிடைக்கும் எளிய கருவி என்கின்றனர் இதன் படைப்பாளிகள்.

குறைவான இடத்தை அடைத்தாலும், சற்று அதிக உயரமுள்ள ஏரோமைன், காற்றை உள்வாங்கி, கீழே உள்ள விசிறிக்குத் தருகிறது. துளியும் ஓசையில்லாமல் சுழலும் விசிறி, ஜெனரேட்டரை இயக்கி மின் உற்பத்தி செய்கிறது.

சூரிய ஒளி போல பகலில் மட்டுமல்ல, இரவிலும் உற்பத்தி செய்து, 50 சதவீதம் அதிக மின்சாரத்தை தருகிறது ஏரோமைன் காற்றாலை.

செயற்கை நாளங்கள் வந்தாச்சு!



விபத்து அல்லது நோயால் இரத்த நாளங்கள் சேதமடைந்தால், இரண்டு வித சிகிச்சைகள்தான் உண்டு. ஒன்று நோயாளியின் உடலில் வேறு பகுதியிலிருந்து இரத்தக்குழாய்களை எடுத்து ஒட்டுவது.

அல்லது கொடையாளி ஒருவரின் உடலிலிருந்து எடுத்து வைப்பது.

தற்போது, அவுஸ்திரேலியாவின் சிட்னி பல்கலைக்கழக விஞ்ஞானிகள், மனித இரத்த நாளத்திலுள்ள எலாஸ்டின் என்ற புரதத்தைப் போலவே செயற்கையாக ட்ரோபோ எலாஸ்டின் என்ற பொருளை உருவாக்கி, அதில் இரத்த நாளங்களை வடிவமைத்துள்ளனர்.

எலிச் சோதனைகளில் இதை, இயற்கை இரத்த நாளங்களைப் போலவே செயற்கை எலாஸ்டின் நாளங்களை எலியின் உடல் ஏற்றுக்கொள்வது தெரியவந்துள்ளது. மனித உடலும் இந்த செயற்கை இரத்த நாளங்களை ஏற்றால், அது சர்க்கரை நோயாளிகளுக்கு வரமாக அமையும். மேலும், விபத்துகளில் சிக்கியவர்களுக்கு மறுவாழ்வளிக்கவும் உதவும்.

நக்கல் நமசிவாயம்

அரசாங்கத்துக்கு எதிரான எதிர்க்கட்சி ஆர்ப்பாட்டத்தில் பல கட்சிகள் இல்லையாம்... எல்லாரும் சேர்ந்து ஆர்ப்பாட்டம் செய்யுங்கோ என்று தனியா வேறொரு ஆர்ப்பாட்டம் செய்யோணும் போல..!

இன்றைய நாளில்...

- ★ 1838 – பாம்பே டைம்ஸ் முதன்முதலில் வெளியிடப்பட்டது. இது பின்னர் 1861 இல் டைம்ஸ் ஒவ் இந்தியா எனப் பெயரிடப்பட்டது.
- ★ 1957 – ஸ்புட்னிக் திட்டம்: உலகில் முதன்முதலில் மிருகம் ஒன்றை (லைக்கா என்னும் நாய்) சோவியத் ஒன்றியம் ஸ்புட்னிக் 2 விண்கலத்தில் விண்வெளிக்கு அனுப்பியது.
- ★ 1963 – தி.மு.க. செயற்குழு திராவிட நாடு, தனிநாடு கோரிக்கையைக் கைவிடுவதாக அறிவித்தது.
- ★ 1963 – ஜெய்ப்பூரில் நடைபெற்ற இந்திய தேசிய காங்கிரஸின் மாநாட்டில் காமராஜர் அதன் தலைவராகத் தெரிவுசெய்யப்பட்டார்.
- ★ 1973 – மரைனர் திட்டம்: நாசா மரைனர் 10 என்ற விண்கலத்தை புதன் கோள் நோக்கி அனுப்பியது. 1974, மார்ச் 29 இல் புதனை அடைந்து அக்கோளை அடைந்த முதலாவது விண்கலம் என்ற சாதனையைப் பெற்றது.
- ★ 1975 – ஷேக் முஜிபுர் ரஹ்மானின் ஆதரவாளர்கள் உட்படப் பல வங்காளதேச அரசியல்வாதிகள் டாக்கா மத்திய சிறையில் படுகொலை செய்யப்பட்டனர்.
- ★ 1988 – இலங்கையின் தமிழீழ மக்கள் விடுதலைக் கழகப் போராளிகளினால் மாலை தீவுகள் அரசைக் கவிழ்க்க எடுக்கப்பட்ட முயற்சி இந்திய இராணுவத்தினரால் 24 மணிநேரத்தில் முறியடிக்கப்பட்டது.
- ★ 2014 – உலக வர்த்தக மையம் திறக்கப்பட்டது.

வலி. வடக்கு காணி விடுவிப்பு குறித்து புதிய தகவல் வெளியிட்டார் அமைச்சர் டக்ளஸ்

வடக்கில் காணிகளை விடுவிப்பது தொடர்பில் பருவ மழை காலம் நிறைவடைந்ததும் தீர்க்கமான முடிவெடுக்கப்படுமென ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உறுதியளித்துள்ளதாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

வலி. வடக்கு, மயிலிட்டி துறைமுகத்திற்கு நேற்று (02.11.2022) சென்ற அமைச்சர் அங்கு கடற்றொழிலாளர்களுடனான சந்திப்பின்போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்,

"வடக்கு, கிழக்கு மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் மற்றும் அபிலாஷைகளுக்குத் தீர்வுகாணும் வகையில் அமைக்கப்பட்டுள்ள அமைச்சரவை உபகுழுக் கூட்டத்தில் ஜனாதிபதி இந்த உத்தரவாதத்தை வழங்கியுள்ளார். பருவ மழை காலம் நிறைவடைந்ததும் நேரடியாக சம்பந்தப்பட்ட பகுதிகளுக்கு விஜயம் செய்து தீர்க்கமான முடிவுகளை எடுப்பதற்கு எதிர்பார்த்துள்ளார்.

கடந்த காலங்களில் தமிழ்த் தரப்புகள் விட்ட தவறுகள் என்னவென்றால், கிடைத்த வாய்ப்புகளை சரியாகப் பயன்படுத்திக்கொள்ளவில்லை என்பதே. இலங்கை - இந்திய ஒப்பந்தத்தை ஏற்றுக்கொண்டிருந்தால் இவ்வாறான நிலைமைகள் ஏற்பட்டிருக்காது. தற்போது கிடைக்கும் சாதகமான வாய்ப்புகளை சரியாகப் பயன்படுத்திக் கொண்டு இனியாவது இருப்பதை பாதுகாத்துக்கொண்டு அதனை முன்னோக்கிச் செல்ல வேண்டும். பிரச்சினைகள் தீர்வை நோக்கிப் போகவேண்டுமேயொழிய, அதனை குழப்பிக்கொண்டு போகும் நோக்கம் எனக்கில்லை" என அமைச்சர் தெரிவித்தார்.

வலி. வடக்கு, மயிலிட்டி துறைமுகத்திற்குச் சென்ற அமைச்சர் அங்கு முன்னெடுக்கப்பட்ட அபிவிருத்திப் பணிகளைப் பார்வையிட்டதுடன், பிரதேச கடற்றொழிலாளர்களினால் முன்வைக்கப்பட்ட அபிப்பிராயங்கள் தொடர்பில் ஆராய்ந்ததுடன், தேவையான ஆலோசனைகளை சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு வழங்கினார்.

100 Days
Activism
94th Day
100 Days
Activism
94th Day

இலங்கையின் வடக்கு, கிழக்கு வாழ் மக்களுக்கு கௌரவமான உரிமைகளுடன் கூடிய அரசியல் தீர்வைக் கோரி யாழ்ப்பாணம், அளவெட்டிப் பகுதியில் நேற்று (02) வடக்கு, கிழக்கு ஒருங்கிணைப்புக் குழு அமைப்பினால் கவனயீர்ப்புப் போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது. குறித்த கவனயீர்ப்புப் போராட்டத்தில் பெண்கள், இளையோர் அமைப்புகள் மற்றும் சமூக மட்ட அமைப்புகளின் பிரதிநிதிகள் பங்கேற்றிருந்தனர். (சாவகச்சேரி நிருபர்)

கொழும்பில் இடம்பெற்ற மீலாதுன் நபி நிகழ்வு

(ஏ.எஸ்.எம்.ஜாவித்)

பொரளை அஹதிய்யா கல்வி நிலையமும் அகில இலங்கை சூபி தரீக்கா உயர்பீடமும் இணைந்து ஏற்பாடு செய்திருந்த முஹம்மது நபியின் மீலாதுன் நபி நிகழ்வு கொழும்பு பிரதம தபாலக கேட்போர்கூடத்தில் அண்மையில் இடம்பெற்றது.

பொரளை அஹதிய்யா கல்வி நிலையத்தின் பணிப்பாளர் சிப்லி ஹாசிமின் வழிகாட்டலில் நடைபெற்ற இந்நிகழ்வு, அகில இலங்கை றிபாய் தரீக்கா ஆன்மீகத் தலைவர் ஆசிக் தங்கல் தலைமையில் நடைபெற்றது.

இதன்போது அஹதிய்யா போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. அஹதிய்யா போட்டிகளில் பங்குபற்றிய மாணவ, மாணவிகளின் பேச்சு, கதீதா என்பனவும் இடம்பெற்றன.

வரவேற்புரையை சூபி தரீக்கா உயர்பீட செயலாளர் கலாநிதி அஹமட் றிஸி நிகழ்த்தியதுடன், பொரளை அஹதிய்யா கல்வி நிலையப் பணிப்பாளர் சிப்லி ஹாசிம் நன்றியுரையை நிகழ்த்தினார்.

மாத்தறை றிஸ்வியா அரபுக் கல்லூரி தலைவரும் சூபி தரீக்காவின் உயர்பீட உறுப்பினர் முப்தி அல்-ஆலிம் முஸ்தபா ரசா விசேட உரை நிகழ்த்தினார். இதன்போது முக்கியஸ்தர்கள் கௌரவிக்கப்பட்டனர்.

சிரேஷ்ட அறிவிப்பாளர் அஹமட் முனவ்வர் நினைவுச்சின்னம் வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

அகில இலங்கை றிபாய் தரீக்கா ஆன்மீகத் தலைவர் ஆசிக் தங்கல் அவர்களால் நாட்டுக்காகவும் நாட்டு மக்களுக்காகவும் வேண்டி விசேட துஆப் பிரார்த்தனையும் இடம்பெற்றது.

வருமானம் குறைந்த பெண்களின் சுயதொழிலுக்காக 50.4 மில்லியன் ரூபா நிதி கொழும்பில் அன்பளிப்பு

(அஷ்ரப் ஏ சமத்)

ஜப்பான் அரசும், கொழும்பிலுள்ள ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டமும் இணைந்து நாட்டின் பல்வேறு பிரதேசங்களில் வருமானம் குறைந்த பெண் தலைவிகளை அடையாளம் கண்டது. இப்பெண்களது வாழ்க்கையை மேம்படுத்தும் முகமாகவும் 800 பெண்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். இத்திட்டத்தினை மகளிர் விவகார இராஜாங்க அமைச்சர் கீதா குமாரசிங்க முன்னெடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இவ்வகையான பெண்களுக்கு சுயதொழிலுக்கான பயிற்சியும் அளிக்கப்பட்டு அவர்களது சுயதொழில் முயற்சித் திட்டமொன்றை சுயமாகவே ஆரம்பிப்பதற்கான பயிற்சிகள் அளிக்கப்பட்டன. மேற்படி உதவித் திட்டத்திற்கான நிதி வழங்கும் வைபவம் அண்மையில் கொழும்பில் ஆரம்பித்துவைக்கப்பட்டது. இத்திட்டத்திற்காக ஜப்பான் நாட்டுக்கான இலங்கைத் தூதுவர் 50.4 மில்லியன் ரூபாவை குடும்பத் தலைவிகளின் முயற்சிக்குத் வழங்கினார்.

அங்கு அம்பாறையில் வாழும் பெண் உரையாற்றுகையில், எனது கணவர் ஓர் கூலித் தொழிலாளி. அவர் நாளாந்தம் உழைத்துவரும் 1,500 அல்லது 2,000 ரூபாவினால் எனது வாழ்க்கையை நாளாந்தம் கொண்டுசெல்ல முடியாமல் உள்ளது. எனது 3 குழந்தைகளையும் பாடசாலைக்கு அனுப்ப வேண்டும். அவர்களுக்கான மூன்றுவேளை உணவுக்கான வருமானத்திற்காக எனது கணவரது வருமானத்தை மட்டும் நம்பியிராது பெண்களாகிய நாங்களும் எங்களது குடும்பப் பொறுப்பைக் கொண்டுசெல்ல உதவ வேண்டும்.

மேலதிகமாக இடைக்கால வருமானத்தினை ஈட்டுவதாலேயே எங்களது குடும்பத்தையும் வாழ்க்கையையும் சுமுகமாக கொண்டு செல்லமுடியும். ஆகவே ஜப்பான் மற்றும் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிதியம் மற்றும் மகளிர்விவகார அமைச்சும் முன்னெடுத்துள்ள இத்திட்டம் பெரிதும் நன்மை பயக்கும் எனவும் அங்கு வருகை தந்திருந்த பெண் ஒருவர் கருத்துத் தெரிவித்தார்.

இதன் ஊடாக குடும்ப வருமானம் குறைந்த பெண்கள் சுயதொழில் தையல், மா அரைத்தல், விவசாயம் பண்ணை தொழில்களை வீடுகளிலேயே ஆரம்பித்து, இத்திட்டத்தினுடாக கிடைக்கும் வருமானத்தை தமது வாழ்க்கைச் செலவைக் கொண்டுசெல்வதற்கு இத்திட்டம் பெரிதும் நன்மை பயக்கின்றது.

ஜப்பான் தூதுவர், மகளிர் விவகார அமைச்சர் கீதா குமாரசிங்க, ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி கொழும்பு அலுவலக அதிகாரிகள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

02.11.2022 நாணய மாற்று வீதம்

நாணயம்	கொள்வனவு வீதம்	விற்பனை வீதம்
அவுஸ்திரேலியன் டொலர்	118 227	13 1450
கனேடியன் டொலர்	151 8507	164 1 7
சீன யுவான் (ரென்மின்பி)	37 5180	40 5164
யூரோ	243 0484	258 0546
ஜப்பான் யென்	1 3188	1 4222
சிங்கப்பூர் டொலர்	142 5416	153 2610
ஸ்ரேலிங் பவுன்	301 7812	318 1145
சுவிஸ் பிரான்ங்	247 532	263 7618
ஐ.அ.டொலர்	25 60 3	260 4012

நாடு	நாணயம்	விற்பனை வீதம்
பஹ்ரைன்	பஹ்ரைன் தினார்	852 4855
குவைட்	குவைட் தினார்	0,061 5053
ஓமான்	ஓமான் றியால்	832 4762
கட்டார்	கட்டார் றியால்	88 6486
சவூதி அரேபியா	சவூதி அரேபிய றியால்	85 5627
ஐக்கிய அரபு இராச்சியம்	ஐக்கிய அரபு இராச்சிய திர்ஹம்	87 8 72

திகதி
01.11.2022
செவ்வாய்க்கிழமை
உத்தியோகபூர்வ முடிவுகள்
www.nlb.lk
NLB

மஹஜன சம்பத
சீட்டிழுப்பு இலக்கம்: 4926
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை
ரூ. 9,103,170.00
ஆங்கில எழுத்து D
வெற்றி இலக்கங்கள் 8 4 4 9 8 1
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு
ரூ.36,791,981.00

கொவிசெத
ගොවිසෙත Govisetha
சீட்டிழுப்பு இலக்கம் 3168
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை
ரூ.4,618,320.00
ஆங்கில எழுத்து A
வெற்றி இலக்கங்கள் 28 46 55 76
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு
ரூ.61,062,649.20

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் : 1381
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை
ரூ. 1,857,540.00
வெற்றி இலக்கினம் ரிஷபம்
வெற்றி இலக்கங்கள் 8 6 6 1 9 7
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு
ரூ. 10,197,913.20

தன நிதானய
சீட்டிழுப்பு இலக்கம் : 956
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை
ரூ. 3,239,200.00
வெற்றி இலக்கினம் X
வெற்றி இலக்கங்கள் 04 21 57 58
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு
ரூ. 131,474,358.40

ராசி சுப பலன்
හඳහන Handahana
சீட்டிழுப்பு இலக்கம்: 235
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை
ரூ.7,516,920.00
இலக்கினம் தனுசு
வெற்றி இலக்கங்கள் 10 31 43 57
விசேட இலக்கினம் தனுசு
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு
ரூ.2,645,903.00

கோடி 27 + Mega POWER மெகா பவர்
சீட்டிழுப்பு இலக்கம் 1274
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை
ரூ. 3,079,900.00
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு
ரூ.278,924,362.00
R 25 05 57 58 71
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ.10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ.10,000,000.00

ජාතික ලොතරැයි මණ්ඩලය
தேசிய லொத்தர் சபை
National Lotteries Board
தொலைபேசி: 011-4607000, 011 - 4607001 - 2
பெக்ஸ்: 011-4669475
Email : info@nlb.lk
Web : www.nlb.lk
இலக்கம் 32, தேஷமான்ய NWJ முதலிகே மாவத்தை, கொழும்பு 01

1990 ஆம் ஆண்டின் 4ஆம் இலக்க வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 9ஆம் பிரிவின் கீழ் நடைபெறும் ஏலவிற்பனை

செலான் வங்கி (பீ.எல்.சி.) – அம்பாறை கிளை

பெறுமதிமிக்க இடம் ஒன்றின் பிரசித்த ஏலவிற்பனை

அம்பாறையை வதிவிடமாகக் கொண்ட எதிரிவீர ஆராய்ச்சிகே ஸாந்த விக்ரமசேகர என்பவர் "கடப்பாட்டாளராகவும் / ஈடுவைத்தவராகவும்" செலான் வங்கி பீ.எல்.சி.யின் சார்பாக பிரசித்த நொத்தாரிசு H.M.S. குணரத்னவினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2015.03.12 ஆம் திகதியிடப்பட்ட 230ஆம் இலக்க முறியின் மீது வருமதியான கொடுப்பனவில் தவணை தவறியுள்ளதால்.

2022ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 29ஆம் திகதி மு.ப. 11.00 மணிக்கு செலான் வங்கி பீ.எல்.சி.யினால் எனக்கு வழங்கப்பட்ட அதிகாரத்திற்குட்பட்டு செலான் வங்கி பீ.எல்.சி. இல.90, காலி வீதி, கொழும்பு-03 இல் உள்ள கிளை வளாகத்தில் என் மூலமாக பகிரங்க ஏலவிற்பனையினல் விற்கப்படும்.

இந்த ஏலவிற்பனையானது சுகாதார அமைச்சினால் வெளியிடப்பட்டுள்ள கொவிட்-19 நெறிமுறைகளைப் பின்பற்றுவதற்கான கண்டிப்பான வழிகாட்டுதலுக்கேற்ப நடாத்தப்படும்.

அட்டவணை

(1) மத்திய மாகாணம், கண்டி மாவட்டத்தில் பாத்த ஹேவாஹெட்டவின் சுந்தஹய கோரளவில் கங்கவட கோரள மற்றும் கண்டி கடவத் சத்தரவின் பிரதேச சபை எல்லைக்குள் அம்பிட்டிய கிராம உத்தியோகத்தர் பிரிவிற்குள், தென்னேகும்புரவில் உள்ள பீ.இந்ரானி மல்லிகா அவர்களினால் தயாரிக்கப்பட்ட 08.11.2014 ஆம் திகதியிடப்பட்ட வரைப்பட இலக்கம் 1940இல் உள்ள திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தென்னேகும்புர எஸ்டேட்டின் ஒருபகுதி காணியின் லொட் 1 என அடையாளமிடப்பட்ட (உரிமைப்பெற்ற நில அளவையாளர் ஏ.எஸ்.எம்.அஸ்வாட் அவர்களினால் தயாரிக்கப்பட்ட 1990 செப்டம்பர் மாதம் 3 ஆம் திகதியிடப்பட வரைப்பட இலக்கம் 1324 இல் உள்ள திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள காணித் துண்டு லொட் 01 இன் ஒரு பகுதி) பிரித்து ஒதுக்கப்பட்ட காணித்துண்டு அளவில் இருபது பேர்ச்சஸ் (ஏ.0 ரூ.0 பே.20) விஸ்தீரணத்தை கொண்டதுடன் அதில் உள்ள மரங்கள், பயர்ச்செய்கைகள் மற்றும் அதிலுள்ள எல்லாம்.

(2)மத்திய மாகாணம், கண்டி மாவட்டத்தில் பாத்த ஹேவாஹெட்டவின் சுந்தஹய கோரளவில் கங்கவட கோரள மற்றும் கண்டி கடவத் சத்தரவின் பிரதேச சபை எல்லைக்குள் அம்பிட்டிய கிராம உத்தியோகத்தர் பிரிவிற்குள், தென்னேகும்புரவில் உள்ள பீ.இந்ரானி மல்லிகா அவர்களினால் தயாரிக்கப்பட்ட 08.11.2014 ஆம் திகதியிடப்பட்ட வரைப்பட இலக்கம் 1941 இல் உள்ள திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தென்னேகும்புர எஸ்டேட்டின் ஒருபகுதி காணியின் லொட் 1 என அடையாளமிடப்பட்ட பிரிக்கப்பட்ட மற்றும் வரையறுக்கப்பட்ட பகிரப்பட்ட காணி பதினாறு பேர்ச்சஸ் (ஏ.0 ரூ.0 பே.16) விஸ்தீரணத்தை கொண்டதுடன் அதில் உள்ள மரங்கள், பயர்ச்செய்கைகள் மற்றும் அதிலுள்ள எல்லாம்.

காணிக்குப் பிரவேசிக்கும் வழி: கண்டி மஹியங்கன வீதியூடாக தென்னேகும்புர பன்சல வரைக்கும் சென்று மேலும் 270 மீற்றர் தூரம் சென்றதும் பாதையின் இடது பக்கத்தில் மேற்படி காணி உள்ளது. இந்த சொத்துக்கான சாலை கண்டி மஹியங்கன அணுகலுக்குள்ளேயே அமைந்துள்ளது.

தீர்மான முடிவு அறிவித்தல்கள்: 2020.01.24ஆம் திகதி இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியிலும் 2020.10.12 ஆம் திகதி அத, டெயிலி, FT, மற்றும் 2020.10.09 ஆம் திகதி தினக்குரல் பத்திரிகைகளிலும் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

கட்டணங்கள் செலுத்தும் விதம்: உத்தேச கொள்வனவாளர் ஏல முடிவில் பின்வரும் கட்டணங்களை பணமாக ஏலதாருக்கு செலுத்த வேண்டும்.

(1)கொள்வனவு விலையின் 10% ;
(2) உள்ளூராட்சி மன்ற வரி 1% ;
(3) ஏலதாரின் தரகுப் பணம் 2.5% ;
(4) விற்பனை நிபந்தனை உறுதிப்படுத்தலுக்கான நொத்தாரிசுக் கட்டணம் 2500/- ;
(5) இலிகிதர் மற்றும் கூவுவோர் கட்டணங்கள் ;
(6) ஏலத்திற்காக செலவு செய்யப்பட்ட முழு விளம்பர செலவுகள் ;

மிகுதி 90% வீதத்தையும் இலங்கை அரசாங்கத்தினாலோ அல்லது வேறு அதிகாரசபையினாலோ விதிக்கப்படும் சட்ட ரீதியான வரி அல்லது கட்டணங்கள் ஏதுமிருப்பின் அவற்றோடு ஏலத் திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் செலான் வங்கி பீ.எல்.சி. தாபனத்திற்கு செலுத்துதல் வேண்டும். மேற்குறிப்பிட்டவாறு மிகுதிப் பணம் குறிப்பிட்ட திகதிக்கு முன்னால் செலுத்தப்படாதவிடத்து செலுத்திய பணத்தைத் திருப்பித் தராமலிருப்பதற்கும் அதே காணியை மறு ஏலவிற்பனை செய்வதற்கும் வங்கிக்கு அதிகாரம் உண்டு.

உரித்துறுதி, ஏனைய ஆவணங்கள் மற்றும் விபரங்களைப் பெற்றுக் கொள்ள கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள அதிகாரிகளிடம் விசாரணைகளை மேற்கொள்ளவும்.

பிரதான முகாமையாளர் (சட்டம்), செலான் வங்கி பீ.எல்.சி., இலக்கம் 90, காலி வீதி, கொழும்பு 03. தொலைபேசி இலக்கங்கள்: 011-2456485, 011-2456479, 011 2456488

எதுவித முன்னறிவித்தலும் இன்றி மேற்படி ஏலவிற்பனையை நடாத்துவதற்கும் / இரத்துச் செய்வதற்கும் வங்கிக்கு அதிகாரம் உண்டு.

சந்தியா பிரியதர்ஷனீ கமகே
நீதிமன்ற ஆணையாளர்,
விலைமதிப்பீட்டாளர் மற்றும்
உரிமம் பெற்ற ஏலதாரர்

இல 9-I, ஹைலெவல் வீதி,
சர்வோதய மாவத்தை, பனாகொட ஹோமாகம.
தொலைபேசி இலக்கம் : 071 4318252

யாழ்.வலிகாமத்தில் ஆக்கிரமித்துள்ள காணிகளை விடுவிக்கக் கோரி பல்கலை மாணவர்கள் போராட்டம்

Stop the encroachment on our Homeland
Vali North is our native land

(யாழ். நிருபர்)

யாழ்ப்பாணம், வலிகாமம் வடக்குப் பகுதியிலுள்ள காணிகளை விடுவிக்கக்கோரி நேற்று (02) தெல்லிப்பழையில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் கவனயீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

வடக்கு, கிழக்கில் காணி சுவீகரிப்புகள் தொடர்ச்சியாக இடம்பெற்ற வண்ணமே உள்ளன. இது தடுத்து நிறுத்தப்படவேண்டும். அந்தவகையில் வலி. வடக்கு காணிகளை விடுவிக்க வலியுறுத்தி போராடவேண்டிய தேவையுள்ளது.

ஆகவே, தமிழர்களின் உரிமைகளுக்காக தொடர்ந்து பயணித்துக்கொண்டிருக்கக்கூடிய மதகுருமார், சிவில் அமைப்புகள், அரசியல் கட்சிகள் என அனைத்துத் தரப்பினரையும் கட்சி பேதமின்றி பங்கெடுக்குமாறு யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் அழைப்பு விடுத்து இருந்த நிலையில், நேற்று போராட்டத்தில் பல்வேறு தரப்பினரும் கலந்துகொண்டிருந்தனர்.

யாழ். சுயாதீன ஊடகவியலாளர் ரமேஷ் மாரடைப்பால் உயிரிழப்பு; இறுதிக் கிரியைகள் இன்று

(யாழ். நிருபர்)

சமூகப் பணியாளரும், சுயாதீன ஊடகவியலாளருமான செல்வராசா ரமேஷ் (வயது 53) மாரடைப்பு காரணமாக நேற்று முன்தினம் (01) உயிரிழந்துள்ளார்.

யாழ்ப்பாணம் மானிப்பாயிலுள்ள அவரது இல்லத்தில் இன்று வியாழக்கிழமை பிற்பகல் 1 மணிக்கு இறுதிக் கிரியைகள் இடம்பெற்று, நவாலி ஆரியம்பிட்டி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

உள்ளூராட்சி மன்ற உதவியாளராகவும், சமூக செயற்பாட்டாளராகவும் யாழிலிருந்து வெளிவரும் பத்திரிகைகள் உள்ளிட்டவற்றில் சுயாதீன ஊடகவியலாளராகவும் அவர் பணியாற்றி வந்துள்ளார்.

அத்துடன், ஹேமலதா ஞாபகார்த்த நிதியத்தின் தலைவராகவும் இருந்தவர். நிதியத்தின் ஊடாக குறிப்பிடத்தக்க பல்வேறு சமூக சேவைகளை ஆற்றியிருந்தார். அத்துடன், இவர் ஹேமலதாவின் உடன்பிறந்த சகோதரருமாவார்.

இடம்பெயர்ந்து வந்து நவாலி சென். பீற்றர்ஸ் தேவாலயத்தில் தங்கியிருந்த மக்களுக்கு சேவைகளை வழங்கும் முகமாக அங்கு பணியில் இருந்த ஜெ - 134 கிராம சேவையாளர் பிரிவின் கிராம அலுவலகரான செல்வி ஹேமலதா செல்வராசா 1995ஆம் ஆண்டு ஜூலை மாதம் 09ஆம் திகதி விமானப் படையின் விமான குண்டுவீச்சு தாக்குதலில் உயிரிழந்தார். அன்றைய சம்பவத்தில் இவருடன் 147 பேர் உயிரிழந்திருந்தனர்.

குறித்த விமானத் தாக்குதலில் உயிரிழந்த ஹேமலதா செல்வராசாவின் நினைவாகவே ஹேமலதா ஞாபகார்த்த நிதியம் ஆரம்பிக்கப்பட்டு செயற்பட்டு வருகிறது.

அடம்பனில் மர நடுகை திட்டம் ஆரம்பித்துவைப்பு

(மன்னார் நகர் நிருபர்)

'மரம் நாட்டுவோம் - எதிர்கால சந்ததியைப் பாதுகாப்போம்' எனும் தொனிப்பொருளில் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதனின் எண்ணக்கருவில் வன்னி மண் அறக்கட்டளையின் நெறிப்படுத்தலில் மடு கல்வி வலயத்திற்குட்பட்ட மன்னார், அடம்பன் மத்திய மகா வித்தியாலயத்தில் இன்று செவ்வாய்க்கிழமை (01) மு.ப. 11 மணியளவில் மர நடுகைத் திட்டம் வைபவ ரீதியாக ஆரம்பித்துவைக்கப்பட்டது.

இந்நிகழ்வு அடம்பன் மத்திய மகா வித்தியாலய அதிபர் தலைமையில் இடம்பெற்றது.

குறித்த நிகழ்வில் ஆசிரியர்கள், மாணவர்கள், மன்னார் மாவட்ட வனவளத் திணைக்கள அதிகாரிகள், அடம்பன் பொலிஸார், பழைய மாணவர்கள், பெற்றோர்கள் எனப்பலர் கலந்துகொண்டனர்.

இதன்போது பாடசாலை வளாகத்தில் 100இற்கும் மேற்பட்ட மரக்கன்றுகள் நாட்டி வைக்கப்பட்டன.

இதன் முதன்மையான விடயமாக இலங்கையின் தேசிய மரமான நாக மரம் நாடாளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதனால் நாட்டி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

யாழில் வீடொன்று சேதம்; 37 பேர் பாதிப்பு



(யாழ். நிருபர்)

யாழ்ப்பாணத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை முதல் தொடரும் மழை காரணமாக வீடொன்று சேதமடைந்துள்ளது.

சண்டிலிப்பாய் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட பகுதியில் ஐந்து பேர் கொண்ட குடும்பம் ஒன்று வசித்துவந்த வீடொன்றே தொடர் மழை காரணமாக பகுதியளவில் சேதமடைந்துள்ளது.

குறித்த வீட்டில் வசித்தோர் தற்காலிகமாக அங்கிருந்து வெளியேறி வேறு இடத்தில் தங்கியுள்ளனர்.

இதேவேளை, சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்திற்குட்பட்ட பகுதியில் வசிக்கும் 12 குடும்பங்களைச் சேர்ந்த 37 பேர் தொடர் மழை காரணமாக வீடுகளில் வசிக்க முடியாத நிலையில், அங்கிருந்து வெளியேறி காக்கை தீவு மீனவர் சங்கக் கட்டடத்தில் தங்கியுள்ளனர்.

வெள்ள நீரில் கழிவுகளை வீசும் விஷமிகள்; இன்னல்களுக்கு முகங்கொடுத்துள்ள அயலவர்கள்

(யாழ். நிருபர்)

யாழ்ப்பாணம் சோமசுந்தரம் வீதியையும், கோவில் வீதியையும் இணைக்கும் கோவில் ஒழுங்கை பகுதிகளில் விஷமிகள் கழிவுகளை வீசி வருவதால் அப்பகுதியில் வசிக்கும் மக்கள் பல இன்னல்களுக்கு முகங்கொடுத்து வருகின்றனர்.

தற்போது மழைக்காலம் ஆரம்பித்துள்ள நிலையில், குறித்த ஒழுங்கைப் பகுதியில் வெள்ளநீர் தேங்கி நிற்பதால் ஒழுங்கைக்குள் வசிப்பவர்கள் போக்குவரத்து உள்ளிட்ட விடயங்களில் இன்னல்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

இந்நிலையில், தற்போது விஷமிகள் அந்த ஒழுங்கைக்குள் கழிவுகளைக் கொட்டுவதால் பலத்த இன்னல்களை அப்பகுதிகளில் வசிப்போர் எதிர்நோக்கியுள்ளனர்.

வீசப்படும் கழிவுகள் மழை வெள்ளத்தில் மிதந்து வீட்டு வளவுக்குள் வருவதாலும், வீதிகளில் வெள்ளநீருடன் கழிவுகள் சிதறிக் காணப்படுவதாலும் இன்னல்களை எதிர்நோக்குகின்றனர்.

இது தொடர்பில் மாநகர சபை உள்ளிட்ட தரப்புகளுக்கு அறிவித்துள்ளபோதிலும், உரிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவில்லை என அப்பகுதி மக்கள் குற்றஞ்சாட்டுகின்றனர்.

ஹட்டன் – கண்டி பிரதான வீதியில் பஸ் விபத்து; பத்து பேர் காயங்களுடன் வைத்தியசாலையில்

(க.கிஷாந்தன்)

நாவலப்பிட்டி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட மீப்பிட்டிய பகுதியில் நேற்றுக் காலை (02) 7.30 மணியளவில் இடம்பெற்ற வாகன விபத்தில் 10 பேர் படுகாயங்களுக்குள்ளாகிய நிலையில், நாவலப்பிட்டி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சைபெற்று வருகின்றனர்.

ஹட்டன் - கண்டி பிரதான வீதியில் ஹட்டனிலிருந்து கண்டி நோக்கிச் சென்ற தனியார் பஸ்ஸும், கண்டியிலிருந்து ஹட்டன் நோக்கிச் சென்ற தனியார் பஸ்ஸும் நாவலப்பிட்டி மீப்பிட்டிய பகுதியில் வைத்து நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளதாக விசாரணைகளை மேற்கொண்டு வரும் நாவலப்பிட்டி பொலிஸார் தெரிவித்தனர்.

இரு பஸ்களிலும் பயணித்தவர்களில் 10 பேர், காயமடைந்த நிலையில், வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். இதில் பாடசாலை மாணவர்களும், அரச மற்றும் தனியார் நிறுவனங்களில் பணிபுரியும் ஊழியர்கள் குழு ஒன்றும் அடங்குகின்றனர்.

இவ்விபத்து குறித்து மேலதிக விசாரணைகளை நாவலப்பிட்டி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

பசறை பிரதேச செயலகத்திற்கு மூன்றாம் நிலை மண்சரிவு எச்சரிக்கை

நிலவும் மோசமான காலநிலை காரணமாக பதுளை மாவட்டத்தின் பசறை பிரதேச செயலகத்திற்கு 03 ஆம் நிலை மண்சரிவு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

06 மாவட்டங்களில் அடையாளம் காணப்பட்ட பகுதிகளுக்கு 1 ஆம் மற்றும் 2 ஆம் நிலை எச்சரிக்கைகளும் விடுக்கப்பட்டுள்ளதாக தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் தெரிவித்துள்ளது.

கண்டி, கேகாலை, குருநாகல், மொனராகலை, நுவரெலியா மற்றும் இரத்தினபுரி ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த பகுதிகளுக்கே இவ்வாறு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

விக்டோரியா நீர்த்தேக்கத்தின் இரு வான்கதவுகள் திறப்பு

(கண்டி செய்தியாளர்)

விக்டோரியா நீர்த்தேக்கத்தின் தன்னியக்க வான்கதவுகள் இரண்டு நேற்று அதிகாலை திறக்கப்பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

மலையகப் பிரதேசங்களில் பெய்துவரும் கடும் மழை காரணமாக இவ்வாறு இரண்டு வான்கதவுகள் திறக்கப்பட்டுள்ளதாக பொறியியலாளர் வசந்த ஹெஹலபிட்டிய தெரிவித்தார்.

மேலும், அவர் இது பற்றி தெரிவிக்கையில், 722 மில்லியன் கனமீற்றர் கொள்ளவைக் கொண்ட இந்நீர்தேக்கத்தில் தற்போது இரண்டு வான்கதவுகள் திறக்கப்பட்ட காரணத்தால் வினாடிக்கு 160 கனமீற்றர் நீர் ரந்தெனிகல நீர்த்தேக்கத்திற்கு விடுவிக்கப்படுவதாகவும் தெரிவித்தார்.

தற்போது ரந்தெனிகல நீர்த்தேக்கத்தில் 80 சதவீதம் நீர் நிரம்பியுள்ளதாக நிறைவேற்றுப் பொறியியலாளர் மேலும் தெரிவித்தார்.

அகில இலங்கை சமாதான நீதவானாக கேஷனி நியமனம்

(பதுளை நிருபர்)



பதுளையைச் சேர்ந்த கேஷனி திருநாவுக்கரசு அகில இலங்கை சமாதான நீதவானாக பதுளை மாவட்ட நீதிபதி அஜித் லியனகே முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்து பதவியேற்றுக் கொண்டார்.

இவர் பதுளை கிருஷ்ணசாமி-ஹேமலதா ஆகியோரின் சிரேஷ்ட புதல்வியும் பதுளை கட்டடத்துறை பொறியியலாளர் சுப்பிரமணியம் திருநாவுக்கரசுவின் மனைவியும் பதுளை தமிழ் மகளிர் உயர்நிலைக் கல்லூரியின் பழைய மாணவியுமாவார்.

இந்து சமய விடயங்களின் அதிக ஈடுபாடுள்ள இவர் சமூக சேவைகளிலும் பரவலாக ஈடுபட்டு வருகின்றார்.

தொழில்நுட்பக் கோளாறால் தானாக திறக்கப்பட்ட வான்கதவுகள்

குகுலேகங்க அணைக்கட்டுக்கு தாழ்நிலங்களில் வாழும் மக்களுக்கு எச்சரிக்கை

(ஏ.ஏ.எம்.பாயிஸ்)

கலவான குகுலேகங்க அணைக்கட்டின் இரண்டு வான்கதவுகள் தொழில்நுட்பக் கோளாறு காரணமாக தன்னியக்கமாகத் திறந்துள்ளன.

இப்பிரதேசத்தில் பெய்துவரும் கனமழை காரணமாக அணைக்கட்டின் நீர்மட்டம் உயர்ந்து வான்கதவுகள் திறக்கப்படாமலேயே தன்னியக்கமாக இவை திறந்துள்ளன என அணைக்கட்டின் பொறியியல் பிரிவு தெரிவிக்கிறது.

வான்கதவுகள் திறந்துள்ளமையினால் அணைக்கட்டின் பள்ளத்தாக்குப் பகுதியில் வாழும் மக்களை அவதானமாக இருக்குமாறு நீர்ப்பாசனத் திணைக்களம் அறிவுறுத்தல் வழங்கியுள்ளது.

ஊவா மாகாண கிராமிய உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சின் புதிய செயலாளராக நந்தசேன நியமனம்

(பதுளை நிருபர்)

ஊவா மாகாண சபையின் பிரதான அமைச்சுகளில் ஒன்றான நிதி மற்றும் திட்டமிடல், சட்டம் மற்றும் ஒழுங்கு, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு, காணி, மின்சக்தி, கட்டுமானம், கிராமிய உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சின் புதிய செயலாளராக எச்.எம்.நந்தசேன நேற்று முன்தினம் (01) ஊவா மாகாண ஆளுநர் ஏ.ஜே.எம்.முஸம்மிலால் நியமிக்கப்பட்டார்.

குறித்த பிரதான அமைச்சின் செயலாளராக பணியாற்றிய திருமதி சந்தியா அபன்வெல ஓய்வுபெற்றதன் பின்னர் ஏற்பட்ட வெற்றிடத்திற்கே ஊவா மாகாண பிரதி பிரதான செயலாளர் (ஆளணி மற்றும் பயிற்சி) ஆகக் கடமையாற்றிய நந்தசேன நியமிக்கப்பட்டுள்ளார்.

ஊவா பரணகம யாலகமுவ கிராமத்தில் பிறந்து, அங்கேயே தனது பாடசாலைப் படிப்பை ஆரம்பித்த அவர், மஸ்பன்ன மாகாண வித்தியாலயம் மற்றும் கண்டி தர்மராஜ வித்தியாலயங்களின் பழைய மாணவராவார். ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தில் மேலாண்மை (அரசு) படிப்பை நிறைவு செய்ததன் பின்னர் அவர் களனி பல்கலைக்கழகத்தில் பட்டதாரி பட்டம் பெற்றார்.

அதன் பின்னர் கிராம சேவை உத்தியோகத்தராகவும், சமுர்த்தி முகாமையாளராகவும், மாகாண வருமான திணைக்களத்தில் வரி உத்தியோகத்தராகவும் அரச சேவையில் கடமையாற்றியுள்ளார். பின்னர் அரச நிர்வாக சேவை போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்த எச்.எம்.நந்தசேன, திருகோணமலையில் காணி உதவி ஆணையாளராகவும், விவசாய திணைக்கள உதவிப் பணிப்பாளராகவும், சொரணதொட்டை, வெலிமடை, ஹப்புத்தளை, பதுளை மாவட்டத்தின் மீகஹகிவுல பிரதேச செயலக உதவிப் பிரதேச செயலாளராகவும் அதன் பின்னர் அந்த அலுவலகங்களின் பிரதேச செயலாளராகவும் கடமையாற்றியுள்ளார்.

பதுளை மாநகர சபையின் மாநகர ஆணையாளராகவும், ஊவா மாகாண சபையின் நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு ஆணையாளராகவும் அதன் பின்னர் பாதுக்க பிரதேச செயலாளராகவும், புகையிரத திணைக்களத்தின் மேலதிக பொது முகாமையாளராகவும் அவர் கடமையாற்றியுள்ளார்.

பதுளை – பண்டாரவளை பிரதான வழியில் தனியார் பஸ்ஸுடன் மோதி ஆட்டோ விபத்து

ஒருவர் பலி; இருவர் படுகாயம்

(எம்.செல்வராஜா)

தனியார் பஸ் ஒன்றும் ஆட்டோவொன்றும் நேருக்கு நேராக மோதி விபத்திற்குள்ளாகியதில் இளம் பெண்ணொருவர் பலியானதுடன், மேலும் இருவர் ஆபத்தான நிலையில் பதுளை அரசினர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

பதுளை – பண்டாரவளை பிரதான வழியில் ஹல்பே என்ற இடத்தில் நேற்று (02) இவ்விபத்து இடம்பெற்றுள்ளது.

பயணிகளை ஏற்றிச்சென்ற தனியார் பஸ் ஒன்றும் எதிர்த்திசையில் வந்த ஆட்டோவும் நேருக்கு நேர் மோதி விபத்திற்குள்ளாகின. விபத்தில் பெண்ணொருவர் உயிரிழந்துள்ளார்.

குறித்த விபத்தில் பூனாகலை பெருந்தோட்டத்தைச் சேர்ந்த ராஜரட்ணம் பரமேஸ்வரி என்ற 33 வயதுடைய புதிதாக திருமணம் முடித்த இளம் பெண்ணே மரணமானவராவார்.

அவரது கணவன் மற்றும் சகோதரன் ஆகிய இருவரும் பலத்த காயங்களுக்குள்ளாகி பதுளை அரசினர் மருத்துவமனையில் தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இவ்விருவரும் ஆபத்தான நிலையில், இருப்பதாக மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

குறித்த மூவரும் ஆட்டோவில் பயணித்தவர்களென்பது குறிப்பிடத்தக்கது.

எல்ல பொலிஸார் இவ்விபத்து குறித்து விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். விபத்திற்குள்ளான தனியார் பஸ் சாரதி பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கஹவத்தை, ஓபாத்த இலக்கம் 01 கீழ்ப்பிரிவு ஸ்ரீ முத்துமாரியம்மன் தேவஸ்தான புனராவர்த்தன மகா கும்பாபிஷேகம் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றபோது பெருந்திரளான பக்தர்கள் கலந்துகொண்டிருந்தனர்.

கலாநிதி நஜீப் ஹாஜியாருக்கு தர்கா நகரில் வரவேற்பு

(பேருவளை பீ.எம்.முக்தார்)

தர்கா நகர் நஜீப் ஹாஜியார் கல்வி நிலைய ஸ்தாபகரும் முன்னணி பிரபல சமூக சேவையாளருமான நஜீப் ஹாஜியார் பின் அமீர் ஆலிமுக்கு அமெரிக்கா தேசிய வணிக பல்கலைக்கழகத்தினால் கலாநிதி பட்டம் வழங்கி கௌரவிக்கப்பட்டதை முன்னிட்டு அவருக்கு வரவேற்பளிக்கும் நிகழ்வு எதிர்வரும் 05ஆம் திகதி சனிக்கிழமை பி.ப. 3.30 மணிக்கு தர்கா நகர் லோட்டஸ் வீதியிலுள்ள மர்ஹபா வரவேற்பு மண்டபத்தில் நடைபெறும்.

தர்கா நகர் ஸுன்னத் வல் ஜமாஅத் அமைப்பின் ஏற்பாட்டில் நடைபெறும் இவ்விழாவுக்கு மேற்படி அமைப்பின் முக்கியஸ்தர் ஏ.ஆர்.எம் ஹில்மி தலைமை வகிப்பார்.

சீனன்கோட்டை இரத்தினக்கல் மற்றும் ஆபரண வர்த்தகர் சங்க முன்னாள் தலைவரும் ஆலோசகரும் மனித உரிமைகள் அமைப்பின் முக்கிஸ்தருமான கலாநிதி எம்.இஸட்.எம் நிஸார் ஹாஜியார் பிரதம அதிதியாக கலந்துகொள்வார்.

தர்கா நகர் தேசிய கல்வியற் கல்லூரி முன்னாள் உப பீடாதிபதி மௌலவி ஏ.ஆர்.எம்.ஸில்மி (நூரி - அல்-அஸ்கரி) கல்வியும் பட்டம் பதவிகளும் எனும் தலைப்பில் விசேட சொற்பொழிவாற்றுவார். அத்தோடு மக்கொனை அல்-ஹஸனிய்யா முஸ்லிம் மகா வித்தியாலய முன்னாள் அதிபரும் எழுத்தாளருமான எம்.எஸ்.எம்.இர்பான் நஜீப், ஹாஜியார் பற்றி உரையாற்றுவார்.

கலாநீதி நஜீப் ஹாஜியார் பின் அமீர் ஆலிம் விழாவில் கௌரவிக்கப்படவுள்ளதோடு விசேட துஆப்பிரார்த்தனையும் இடம்பெறும்.

விழாவில் புத்திஜீவிகள், உலமாக்கள், அரசியல்வாதிகள், பள்ளிவாசல்களின் நிர்வாகிகள், பிரமுகர்கள் பலரும் கலந்துகொள்வர்.

நாடாளுமன்றத்தைப் பார்வையிட வந்த பாடசாலை மாணவ, மாணவியர் சபாநாயகரைச் சந்தித்தனர்

நாடாளுமன்றத்தைப் பார்வையிடுவதற்காக நேற்றுமுன்தினம் (01) வருகை தந்த மாத்தறை சுஜாதா வித்தியாலய மாணவ, மாணவியருக்கு சபாநாயகரைச் சந்திக்கும் வாய்ப்புக் கிடைத்தது. இந்த மாணவர்கள் சபாநாயகருடன் சிநேகபூர்வ கலந்துரையாடலில் கலந்துகொண்டு தெளிவுபடுத்தல்களையும் பெற்றுக் கொண்டனர்.

நாடாளுமன்ற அமர்வுகள் நடைபெறும் தினங்களில் நாடாளுமன்றத்தைப் பார்வையிடுவதற்கும் நாடாளுமன்ற விவாதங்களைப் பார்வையிடுவதற்கும் பாடசாலை மாணவர்களுக்கு வாய்ப்புகளை வழங்குவது தொடர்பில் நாடாளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுவில் அனுமதி வழங்கப்பட்டிருந்தது. இதற்கமைய நாடாளுமன்றத்திலுள்ள பொதுமக்கள் கலரியிலிருந்து நாடாளுமன்ற விவாதங்களைப் பார்வையிடப் பாடசாலை மாணவர்களுக்கு வாய்ப்புக் கிடைத்துள்ளது.

எனவே, பாடசாலை அதிகாரிகள் தமது விண்ணப்பத்தை படைக்கல சேவிதருக்குக் கடிதம் மூலம், தொலைநகல் மூலம் (0112777473/ 0112777335) அல்லது www.parliament.lk என்ற இணையவழியூடாகச் சமர்ப்பிக்க முடியும்.

இரத்தினபுரி மாவட்ட அறநெறிப் பாடசாலை ஒன்றியத்தின் ஏற்பாட்டில் 'நவராத்திரி கலைச்சாரல் 2022' நிகழ்ச்சி கடந்த ஞாயிற்றுக்கிழமை கஹவத்தை ஸ்ரீ கிருஷ்ணா தேசிய பாடசாலையின் பிரதான மண்டபத்தில் இடம்பெற்றது.

PLATINUM
JUBILEE
&
ENGLISH CAM
TMMV
2022.10.20
70

தல்துவ முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் நடைபெற்ற மீலாதுன் நபி விழாவின்போது அண்மையில் ஷாதுலி தரீக்காவின் கலீபாவாக நியமனம் பெற்ற கொழும்பு உம்மு ஸாவியாவின் பிரதம இமாமும், அஜ்வாத் அல் பாஸி அரபுக் கல்லூரியின் அதிபரும், பிரபல இஸ்லாமிய மார்க்க பேச்சாளருமான மௌலவி எம்.எஸ்.எம் அஹ்மத் (மஹ்லரி) பாடசாலையின் அதிபர் டீ.எம்..எஸ்.எம்.அவ்ன் அவர்களினால் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டபோது எடுக்கப்பட்ட படம்.

(படம்: பேருவளை பீ.எம்.முக்தார்)

புதிய பணிப்பாளருக்கு பாபு சர்மா வாழ்த்து

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் புதிய பணிப்பாளராக பதவியேற்றுள்ள அனிருத்தனுக்கு சர்வதேச இந்து மத பீட செயலாளர் கலாநிதி சிவஸ்ரீ ராமச்சந்திர குருக்கள் பாபு சர்மா சர்வதேச இந்து மத பீடத்தின் ஆசிகளையும் வாழ்த்துகளையும் தெரிவித்துள்ளார்.

அ. உமா மகேஸ்வரன் கடந்த எட்டு வருடங்களாக பணிப்பாளராகக் கடமையாற்றி வடமாகாண சபைக்குப் பிரதி பிரதம செயலாளராக பதவி உயர்வு பெற்றுச்சென்றதைத் தொடர்ந்து அனிருத்தனன் இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் புதிய பணிப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளராக, பொதுச் சேவை ஆணைக்குழுவின் உதவிச் செயலாளராக, ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளராக மற்றும் இலங்கை அபிவிருத்தி நிர்வாக சேவை நிறுவனத்தின் நிர்வாகப் பிரிவுப் பணிப்பாளராக என பல்வேறு பதவிகளை அர்ப்பணிப்புடன் ஆற்றிய இவர், இலங்கை நிர்வாக சேவையின் முதல் தர அதிகாரியாவார்.

இவரது பதவிக்காலத்தில் இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் பணிகள் மென்மேலும் வளர்ச்சி பெற வாழ்த்துவதாக சர்வதேச இந்து மத பீட செயலாளர் கலாநிதி சிவஸ்ரீ ராமச்சந்திர குருக்கள் பாபு சர்மா தெரிவித்தார்.

ஊடக மாணவர்களின் திறனை வளர்க்க பயிற்சிப்பட்டறை

Auteurs Diaries நிறுவனம், ஊடகவியலாளர்கள், குறும்படத் தயாரிப்பாளர்கள், சமூக ஆர்வலர்கள் மற்றும் ஊடக மாணவர்களின் திறனை வளர்ப்பதற்கான ஒரு பயிலரங்கத்தை அண்மையில் Wonder ஹோட்டலில் ஏற்பாடு செய்து செயல்படுத்தியது.

மொபைல் வீடியோ கதைசொல்லல் மற்றும் மொபைல் ஜேர்னலிசம் (MoJo) ஆகியவற்றில் ஆர்வமுள்ள கதைசொல்லிகளுக்கு பயிற்சியளிப்பதுடன், சமாதானம், ஜனநாயகம் மற்றும் மனித உரிமைகள் போன்ற கருத்தியல் தலைப்புகளில் மாணவர்களுக்கு அறிவை வழங்குவது இந்தப் பட்டறையின் நோக்கமாகும். பல்வேறு இன, மொழி மற்றும் பின்புலங்களைச் சேர்ந்த 24 இளம் ஊடகவியலாளர்கள் இந்தப் பயிலரங்கில் பங்கேற்கத் தெரிவுசெய்யப்பட்டனர்.

அக்டோபர் 15, 2022 அன்று, "Peace Speaks" என்ற நிகழ்வு அதிகாரப்பூர்வமாக தொடங்கப்பட்டது. Auteurs Diariesஇன் நிர்வாக இயக்குனர் பிரசன்னா அன்ரனி கலந்துகொண்டு உரையாற்றுகையில், இந்தப் பயிலரங்கு மூலம் நீதி, சமத்துவம் மற்றும் சமாதானத்தை ஊக்குவிக்கும் மொபைல் காணொளி கதைகளை உருவாக்க பங்கேற்பாளர்கள் தங்கள் திறமையை வளர்த்துக்கொள்ள முடியும் - என்றார்.

மேலும், பிரசன்னா, Peace Speaks என்பது பன்மைத்துவ மற்றும் செயல் அடிப்படையிலான ஒரு தனித்துவமான நிகழ்ச்சி என்று வலியுறுத்தினார், அத்தோடு பங்கேற்பாளர்களுக்கு அதிலிருந்து அதிகப் பலன்களைப் பெறுமாறு அவர் அறிவுறுத்தினார். பங்கேற்பாளர்கள் சமாதானம் மற்றும் உணர்திறன் கொண்ட கதை சொல்லல், வெறுப்புப் பேச்சுகளை எதிர்த்துப் போராடுதல், சமூக மாற்றத்திற்கான கதை சொல்லல், கதையைப் பரப்புவதற்கு சமூக ஊடகங்களைப் பயன்படுத்துதல், திரைக்கதை எழுதுதல், அடிப்படை காட்சிகளின் வகைகள், காட்சிகள், கெமரா கோணங்கள், இலவச மொபைல் பயன்பாடுகள், மொபைல் செயலி மூலம் எடிட்டிங் மற்றும் மொபைல் கதை சொல்லும் நுட்பங்கள் என்று அந்தந்தத் துறையில் உள்ள நிபுணர்களால் பயிற்சியளிக்கப்பட்டது.

3ஆம் நாள், பங்கேற்பாளர்கள் 5 குழுக்களாகப் பிரிக்கப்பட்டு, சிறிய காணொளி கதைகளைத் தயாரிப்பதில் வகுப்பறைக் கற்றலைப் பயன்படுத்துவதற்கும், மேலும் அனுபவங்களை பெறுவதற்கும், கொள்ளுப்பிட்டி சந்தைக்கு களப்பயணம் மேற்கொண்டனர். இதன் விளைவாக, பங்கேற்பாளர்கள் 6 காணொளி கதைகளை உருவாக்கினர். பயிற்சித் திட்டத்திற்குப் பிறகு, பயிற்றப்பட்ட இளைஞர்கள் சமாதானத்திற்கான கதைகளை அடையாளம் காண்பார்கள். மேலும் Auteurs Diaries ஆலோசகர்களின் ஆதரவுடன் அவர்கள் சமாதானம் மற்றும் சமத்துவத்தின் குரல்களைப் ஓங்கச் செய்யும் சிறு காணொளி கதைகள் மற்றும் MoJo கதைகளை உருவாக்குவார்கள்.

"Peace Speaks" நிகழ்ச்சியானது இலங்கை யுனைட்ஸ் ஆதரவுடன் அமெரிக்கத் தூதரகத்தால் நிதியளிக்கப்பட்டு, Auteurs Diaries நிறுவனத்தால் செயல்படுத்தப்பட்டு ஒழுங்கமைக்கப்பட்ட ஒரு முயற்சியாகும்.

அதிகஷ்ட பாடசாலையில் ஐந்து வருடங்கள் கடமையாற்றியும் இடமாற்றம் வழங்கப்படவில்லை

கிழக்கில் ஆசிரியர்கள் கண்டன ஆர்ப்பாட்டம்

(அப்துல்சலாம் யாசீம்- ரவ்பீக் பாயிஸ்)

அதிகஷ்ட பாடசாலையில் ஐந்து வருடங்கள் கடமையாற்றிய போதிலும், இடமாற்றம் வழங்கப்படாமையைக் கண்டித்து நேற்று (02) கிழக்கு மாகாண கல்வி அமைச்சுக்கு முன்னால் ஆசிரியர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

2023 ஆம் ஆண்டுக்கான இடமாற்ற விண்ணப்ப படிவங்கள் பெறப்பட்டன. இதன்போது கடந்த 2022ஆம் ஆண்டு ஜூலை மாதம் 31ஆம் திகதி ஐந்து வருடங்கள் கடமையாற்றியவர்களுக்கு இடமாற்றம் வழங்குவதாகக் கூறி விண்ணப்பங்கள் பெறப்பட்டன.

இருந்தபோதிலும், தற்போது ஆறு வருடங்கள் கடமையாற்றிய ஆசிரியர்களுக்கு இடமாற்றம் வழங்கப்படுவதாக கிழக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

இதனால் ஆசிரியர்கள் மன உளைச்சலுக்கு ஆளாகி வருவதாகவும் இருநூறு கிலோ மீற்றருக்கு அப்பால் இருந்து வருகை தந்து தமது அதிகஷ்ட பாடசாலைகளுக்கு சென்று மாணவர்களுக்கு கல்வியை புகட்டுவதாகவும் பாதிக்கப்பட்ட ஆசிரியர்கள் குறிப்பிடுகின்றனர்.

அதிகஷ்ட பாடசாலைகளில் ஐந்து வருடங்கள் கடமையாற்றிய ஆசிரியர்களுக்கு இடமாற்றம் வழங்கப்படவிருந்ததை கிழக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் தடுத்து நிறுத்தியமை மன வருத்தத்தை ஏற்படுத்துவதாகவும் பாதிக்கப்பட்ட ஆசிரியர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

கடந்த ஐந்து வருடங்கள் அதிகஷ்ட பாடசாலைகளில் கடமையாற்றிய ஆசிரியர்களுக்கு இடமாட்டத்தை வழங்குமாறு ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்ட பாதிக்கப்பட்ட ஆசிரியர்கள் கோரிக்கை விடுத்தனர். இது தொடர்பாக கிழக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் புள்ளிநாயகத்திடம் வினவியபோது, இன்னும் இடமாற்றங்கள் எவருக்கும் வழங்கப்படவில்லை எனவும், தற்போது தரவுகள் மாத்திரம் பெறப்பட்டு வருவதாகவும் குறித்த ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு தவறான முறையில் எவரோ வழங்கிய தகவலின் அடிப்படையில் தேவையற்ற விதத்தில் ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்து வருவதாகவும் தெரிவித்தார்.

வாழைச்சேனை தனியார் பஸ் சாரதிகள் நேற்று பணிப்புறக்கணிப்புப் போராட்டம்

Road Passenger Transport Authority
Bus Stand - Valaichchenai

(கல்குடா நிருபர்)

வீதிப்போக்குவரத்துப் பயணிகள் அதிகார சபைக்குட்பட்ட வாழைச்சேனை தனியார் பஸ் சாரதிகள் நேற்று (02) காலை பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபட்டனர்.

மட்டக்களப்பு மாவட்ட வீதிப்போக்குவரத்து பயணிகள் அதிகார சபையின் காரியாலயத்தில் கடந்த மாதம் 18ஆம் திகதி இடம்பெற்ற கூட்டத்தில் வாழைச்சேனை தனியார் பஸ் சாரதிகளால் தங்களுக்கு சுழற்சி முறையில் பஸ்களை செலுத்த ஏற்பாடுகளை செய்யுமாறு கோரிக்கை விடுக்கப்பட்டது.

ஒக்டோபர் மாதம் 31ஆம் திகதிக்குள் சுழற்சி முறையில் பஸ்களை செலுத்தும் வகையில் ஏற்பாடுசெய்து தருவதாக மாவட்டப் பணிப்பாளர் வாக்குறுதி வழங்கிய நிலையில், இன்றுவரை அவ்வாறு செய்யாத காரணத்தினால் வாழைச்சேனை தனியார் பஸ் சாரதிகள் நேற்று அதிகாலை முதல் பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபட்டனர்.

இதுவிடயம் தொடர்பில் திருகோணமலை வீதிப் போக்குவரத்து பயணிகள் அதிகார சபையின் பணிப்பாளர் வாழைச்சேனை தனியார் பஸ் சாரதிகள் தரிப்பு நிலையத்திற்கு வருகை தந்து சாரதிகளுடன் கலந்துரையாடல் ஒன்றை மேற்கொண்டார். இதன் பிரகாரம் எதிர்வரும் 8ஆம் திகதி சுழற்சி முறையில் பஸ்களை செலுத்துவதற்கு ஏற்பாடுகளை மேற்கொண்டு தருவதாக வாக்குறுதி வழங்கினார்.

திருகோணமலை வீதிப் போக்குவரத்து பயணிகள் அதிகார சபையின் பணிப்பாளரின் வாக்குறுதியை தொடர்ந்து நேற்று (02) காலை 10 மணிக்கு தனியார் பஸ்கள் வழமையான முறையில் பயணம் செய்ததுடன், எதிர்வரும் 8ஆம் திகதி எங்களுக்கான தீர்வுகள் கிடைக்காது விடும் பட்சத்தில் போராட்டம் மீண்டும் தொடரும் என சாரதிகள் தெரிவித்தனர்.

இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான பஸ்கள் மாத்திரம் காலையில் சேவையில் ஈடுபட்டன.

கிரீன் பீல்ட் வீட்டுத்திட்டத்தில் ஜனாஸா மையவாடி அமைக்க மகஜர் கையளிப்பு

(மாளிகைக்காடு நிருபர்)

சுனாமி அனர்த்தத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்காக உருவாக்கப்பட்ட கிரீன் பீல்ட் பிரதேசத்தில் ஜனாஸா மையவாடியொன்றை அமைக்க கல்முனை பிரதேச செயலாளர் உடனடியாக நடவடிக்கை எடுத்து அதற்கான காணியை பெற்றுத்தர வேண்டுமென கோரிக்கை முன்வைத்து, கல்முனை பிரதேச செயலாளர் ஜே.லியாகத் அலியிடம் கல்முனை மாநகர சபை உறுப்பினரும், இஸ்லாமிய ஜனாஸா நலன்புரி சங்க செயலாளருமான எம்.எஸ்.எம்.நிஸார் (ஜே.பி) நேற்றுக் காலை மகஜர் ஒன்றை கையளித்துள்ளார்.

மகஜர் கையளித்த பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த மாநகர சபை உறுப்பினர் நிஸார்,

கல்முனை பிரதேச செயலக நிர்வாகத்தின் கீழ் உள்ள கிரீன் பீல்ட் பிரதேசத்தில் மையவாடிக்கான காணியை பெற்றுத் தரக் கோரி இஸ்லாமிய ஜனாஸா நலன்புரி சங்கத்தினால் பிரதேச செயலாளரின் மேலான கவனத்திற்கு தெரியப்படுத்தியுள்ளோம். கல்முனை இறா வெளிக்கண்டம் வீட்டுத்திட்டத்தில் பல நூற்றுக்கணக்கான குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றன. அவர்களின் இறுதி நல்லடக்கத்திற்கான மையவாடி ஒன்றில்லாமையினால் பல சிரமங்களையும், கஷ்டங்களையும் எதிர்நோக்கி வருகின்றார்கள். ஜனாஸாக்களை சுமந்துகொண்டு ஏறத்தாழ ஒன்றரை கிலோமீற்றர் பயணித்து கடற்கரை வீதிவரை செல்ல வேண்டியுள்ளது.

எதிர்கால சந்ததியின் நன்மையை கருத்தில் கொண்டும் இவ்விடயத்தின் அவசர நிலையை கருத்தில் கொண்டும் இப்பிரதேச மக்களின் தேவையைப் பூர்த்தி செய்யும் பொருட்டு, அங்கு இருக்கின்ற அரச காணிகளில் மூன்று ஏக்கர் பரப்புடைய காணியில் மையவாடி ஒன்றை அமைப்பதற்கு இஸ்லாமிய ஜனாஸா நலன்புரி சங்கத்திற்குப் பெற்றுத்தர ஆவன செய்யுமாறு பிரதேச செயலாளரை கேட்டுக் கொண்டுள்ளோம்.

இது தொடர்பாக உரிய நடவடிக்கை எடுக்க தயாராக உள்ளதாக பிரதேச செயலாளர் தன்னிடம் நம்பிக்கை வெளியிட்டதாக மேலும் தெரிவித்தார். சாய்ந்தமருது, மருதமுனை பிரதேசத்திலும் இந்த கோரிக்கை முன்வைக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

உலக வங்கியின் நிதியுதவியில் காத்தான்குடி கடற்கரை வீதி பழைய சிறுவர் பூங்கா வளாகத்தில் கட்டப்படும் சந்தைக் கட்டடத் தொகுதியை பார்வையிட உலக வங்கியின் பிரதிநிதிகள் நேற்று முன்தினம் (01) காத்தான்குடிக்கு விஜயம் ஒன்றை மேற்கொண்டிருந்தனர். கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர், உதவி ஆணையாளர், பொறியியலாளர்கள் எனப் பலர் அடங்கிய குழுவினருடன் வருகை தந்திருந்தனர். (காத்தான்குடி நிருபர்)

ICC T20 World Cup - 2022

குழு ஒன்றிலிருந்து அரையிறுதிக்குத் தெரிவாகுவது யார்?

நான்கு அணிகளுக்கிடையில் பலத்த போட்டி

(ஏ.அகீல் சிஹாப்)

எட்டாவது ஐ.சி.சி. இருபதுக்கு 20 உலகக்கிண்ணக் கிரிக்கெட் தொடர் கடந்த மாதம் 16ஆம் திகதி முதல் அவுஸ்திரேலியாவின் பல்வேறு மைதானங்களில் நடைபெற்றுவரும் நிலையில், தொடர் நாளுக்கு நாள் விறுவிறுப்பான கட்டத்தை எட்டியிருக்கிறது.

சுப்பர் 12 சுற்றுப்போட்டிகள் இறுதிக்கட்டத்தை எட்டியிருக்கும் நிலையில், இந்த வாரத்துடன் அனைத்து சுப்பர் 12 சுற்றுப் போட்டிகளும் நிறைவுக்கு வருகின்றன. இரு குழுக்களில் ஒவ்வொரு குழுவில் இருந்தும் தலா இரண்டு அணிகள் வீதம் நான்கு அணிகள் அரையிறுதிக்கு தகுதிபெற பலப்பரீட்சை நடத்தி வருகின்றன. இதில் இலங்கை அணி இடம்பெற்றுள்ள குழு-1 தொடர்பில் அவதானம் செலுத்தலாம்.

நியூசிலாந்து, இங்கிலாந்து, அவுஸ்திரேலியா, இலங்கை, ஆப்கானிஸ்தான் மற்றும் அயர்லாந்து ஆகிய அணிகள் குழு ஒன்றில் இடம்பெற்றுள்ளன. இதில் ஆப்கானிஸ்தான் அணி இலங்கை அணியுடன் தோல்வியடைந்ததைத் தொடர்ந்து அரையிறுதிக்குத் தகுதிபெறும் வாய்ப்பை இழந்தது. மறுமுனையில் அயர்லாந்து அணியும் தனது வாய்ப்பை இழந்துள்ளது. தற்போது நியூசிலாந்து, அவுஸ்திரேலியா இலங்கை மற்றும் இங்கிலாந்து ஆகிய அணிகளுக்கிடையில்தான் போட்டி நிலவுகிறது.

இதில் நியூசிலாந்து, இங்கிலாந்து மற்றும் அவுஸ்திரேலியா ஆகிய அணிகள்தான் தகுதி பெறுவதற்கு அதிகளவிலான வாய்ப்புகள் காணப்படுகின்றன. தற்போது ஒவ்வொரு அணிக்கும் தலா ஒவ்வொரு போட்டி வீதம் எஞ்சியிருக்கிறது. இந்த ஆட்டங்களைப் பொறுத்தவரையில் நியூசிலாந்து அணிக்கு அயர்லாந்து அணியுடனான போட்டி எஞ்சியிருக்கிறது. இந்த ஆட்டத்தில் நியூசிலாந்து அணி எப்படியாவது வெற்றிபெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அவ்வாறு வெற்றி பெற்றால் நியூசிலாந்து அணி அரையிறுதிப்போட்டிக்குத் தகுதி பெறுகின்ற வாய்ப்பை பெற்றுவிடும்.

மறுமுனையில் அவுஸ்திரேலிய அணிக்கு ஆப்கானிஸ்தான் அணியுடனான போட்டி எஞ்சியிருக்கிறது. இந்தப் போட்டியில் அவுஸ்திரேலிய அணி வெற்றிபெறும் பட்சத்தில் இலங்கை அணி இங்கிலாந்து அணியுடன் வெற்றிபெற்றும் அரையிறுதிப் போட்டிக்கு தகுதிபெற முடியாத ஒரு நிலை உருவாகும். இவ்வாறு ஆப்கானிஸ்தான் அணியுடனான போட்டியில் அவுஸ்திரேலிய அணி வெற்றி பெற்றால் அடுத்த ஒரு வாய்ப்பு இங்கிலாந்து அணிக்குத்தான் காணப்படும்.

இங்கிலாந்து அணி இலங்கை அணியை வீழ்த்தும் பட்சத்தில் நெட் ரன்ரேட் அடிப்படையில் குறித்த மூன்று அணிகளில் இரண்டு அணிகள் அரையிறுதிப் போட்டிக்கு தெரிவாகும். எனவே, தற்போது இலங்கையின் எதிர்பார்ப்பு என்னவென்று சொன்னால், அவுஸ்திரேலியா மற்றும் நியூசிலாந்து ஆகிய அணிகள் தங்களுக்கிடையில் நடைபெறுகின்ற போட்டிகளில் ஏதாவது ஓர் அணி தோல்வியடைய வேண்டும். மாறாக இரு அணிகளும் தோல்வியடைந்தாலும் இலங்கை அணிக்கு அதிகமான வாய்ப்புகள் காணப்படுகின்றன.

எனவே, இலங்கை அணி இங்கிலாந்து அணியை சந்திப்பதற்கு முன்னதாகவே நாளைய தினம் அயர்லாந்து மற்றும் நியூசிலாந்து அணிகளுக்கிடையிலான போட்டியும், அவுஸ்திரேலிய மற்றும் ஆப்கானிஸ்தான் அணிகளுக்கிடையிலான போட்டியும் நடைபெறவிருக்கிறது. இந்த இரண்டு போட்டிகளின் முடிவையும் பார்க்கின்றபோது இலங்கை அணியின் அரையிறுதி வாய்ப்பு எவ்வாறு அமையும் என்பது தெரியவரும்.



பொகவந்தலாவை
கெம்பியன்
தமிழ் மகா வித்தியாலய
பழைய
மாணவர்களுக்கிடையிலான

மாபெரும் மென்பந்து
கிரிக்கெட்
சுற்றுப் போட்டி

இடம் :- பாடசாலை மைதானம்
காலம் :- 05,06 ஆம் திகதிகள்

ஊடக அனுசரணை

தமிழன் THAMILAN தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்
வாரவெளியீடு தமிழன் THAMILAN WEEKLY தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்
ஜீனியர் தமிழன்

கிண்ணியா தள வைத்தியசாலையில் முதன்முறையாக ஐந்து மணிநேர உணவுக் கால்வாய் சத்திரசிகிச்சை

(அப்துல்சலாம் யாசீம்)

திருகோணமலை, கிண்ணியா தள வைத்தியசாலையில் முதல் தடவையாக ஐந்து மணித்தியாலங்கள் உணவுக் கால்வாய் சத்திரசிகிச்சை மேற்கொண்டு சாதனை படைத்துள்ளனர்.

கிண்ணியா பிரதேசத்தைச் சேர்ந்த 58 வயதுடைய பெண்ணொருவர் உணவுக் கால்வாயில் ஏற்பட்ட சுகவீனம் காரணமாக 20 வருடங்களாக கண்டி, கொழும்பு, குருநாகல் போன்ற வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வந்துள்ளார்.

நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி காரணமாக குறித்த பெண் சிகிச்சைகளுக்காக வேறு வைத்தியசாலைகளுக்குச் செல்ல முடியாத நிலையில் மீண்டும் கிண்ணியா தள வைத்தியசாலைக்கு வருகை தந்துள்ளார்.

இந்நிலையில், குறித்த நோயாளியை திருகோணமலையைச் சேர்ந்த சத்திரசிகிச்சை நிபுணர் டாக்டர் கே.ஜெயந்தன் பரிசோதனை செய்துள்ளார்.

நோயாளி கடந்த 20 வருடங்களாக தான் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் தனக்கு வேறு இடங்களுக்குச் சென்று சிகிச்சை மேற்கொள்ள முடியாதெனவும் தெரிவித்துள்ளதுடன், உணவுக் கால்வாயில் சுருக்கம் ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவித்ததையடுத்து சத்திரசிகிச்சை மேற்கொண்டால் சீர்செய்ய முடியும் என சத்திரசிகிச்சை நிபுணர் கே.ஜெயந்தன் தெரிவித்துள்ளார்.

இதனையடுத்து குறித்த பெண்ணிற்கு நேற்று முன்தினம் (01) உணவுக் கால்வாயில் உள்ள சுருக்கத்தை சீர்செய்யும் சத்திரசிகிச்சை கிண்ணியா தள வைத்தியசாலையில் முதல் தடவையாக ஐந்து மணித்தியாலங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கிண்ணியா தள வைத்தியசாலையில் தொழில்நுட்பம் மற்றும் வசதிகள் குறைந்து காணப்படும் இவ்வாறான நிலையில், இவ்வாறான ஒரு சத்திரசிகிச்சை மேற்கொள்ளப்பட்டமை வரவேற்கத்தக்கதெனவும் பிரதேச மக்கள் குறிப்பிடுகின்றனர்.

கிண்ணியா தள வைத்தியசாலையில் முதல் தடவையாக ஐந்து மணித்தியாலங்கள் மேற்கொள்ளப்பட்ட சத்திரசிகிச்சை இதுவாகும் எனவும் வைத்தியசாலையின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

நாட்டில் பாதிக்கப்பட்டுள்ள சுற்றுலாத்துறையை கட்டியெழுப்ப நிவாரண உதவி வழங்கவேண்டும்

உலக வங்கியிடம் இலங்கை சுற்றுலா சம்மேளனத் தலைவர் ஜௌபர் கோரிக்கை

இலங்கைக்கு விஜயத்தை மேற்கொண்டுள்ள உலக வங்கி பிரதிநிதிகளுடன் விசேட கலந்துரையாடல் அண்மையில் (31) உலக வங்கி காரியாலயத்தில் இலங்கை சுற்றுலா மற்றும் கைத்தொழில் தலைவர் ஏ.எம்.ஜௌபர் தலைமையில் நடைபெற்றது.

இக்கலந்துரையாடலின்போது சுற்றுலாத்துறையைக் கட்டியெழுப்பும் முகமாக பல்வேறு யோசனைகள் முன்வைக்கப்பட்டன.

இக்கலந்துரையாடலில் உலக வங்கியின் உலக முதலீடு திட்டமிடல் மற்றும் ஊக்குவிப்புக்கான உலக வங்கி பிரதிநிதி ஐவன் எண்டன் நிமேக், உலக வங்கியின் தனியார்துறை விசேட ஆலோசகர் திருமதி பிரியங்கா கெஹர் மற்றும் உலக வங்கியின் பொருளாதார நிபுணர் அமிலா ஈஸ்வரி தயாநாயக்க, சுற்றுலா சம்மேளனத்தின தலைவர் ஏ.எம்.ஜௌபர், விசேட ஆலோசகர் திஸ்ஸ ஜயவீர ஆகியோர் கலந்துகொண்டனர்.

ஈஸ்டர் தாக்குதல், கொவிட்-19 பாதிப்பு மற்றும் நாட்டின் தற்போதைய பொருளாதார பாதிப்பினால் சுற்றுலாத்துறை மிகுந்த வீழ்ச்சி அடைந்துள்ளது. இத்துறையின் 30 இலட்சத்துக்கும் அதிகமான மக்கள் தனது வாழ்வாதாரமாக இத்துறையை நம்பி வாழ்ந்து வருகின்றார்கள். இதனால் இவர்களது வாழ்க்கை பாதிப்படைந்துள்ளதை சுற்றிகாட்டியுள்ளதுடன், பல்வேறு யோசனைகளையும் முன்வைத்துள்ளனர்.

1. சுற்றுலாத்துறையில் ஈடுபட்டுள்ள சகலருக்கும் நிதி நிவாரணம் வழங்குமாறு உலக வங்கியிடம் கோரிக்கை.

2. சுற்றுலாத்துறையில் ஈடுபட்டுள்ள சுமார் 3 இலட்சத்துக்கும் அதிகமான ஊழியருக்கான ஓய்வூதிய நிதியை வழங்குமாறு கோரிக்கை.

3. இலங்கையிலுள்ள சகல பல்கலைக் கழகங்களுக்கும் சுற்றுலா பாடநெறியை நடத்துவதற்கான நிதியுதவியை வழங்குதல்.

4. சுற்றுலா பிரதேசங்களில் மலசலகூடம், தகவல் மத்திய நிலையம் போன்றவற்றை அமைப்பதற்கு நிதியுதவியை வழங்குதல்.

5. முச்சக்கரவண்டிச் சாரதிகள், வாகனச் சாரதிகள், ஜீப் சவாரி சாரதிகளுக்கு பயிற்சி வழங்கப்பட்டு அவர்களை இனங்காணும் முகமாக விசேட சீருடை வழங்கப்பட வேண்டும்.

6. சுற்றுலா வலயங்களிலுள்ள பாடசாலை மாணவர்களுக்கு சுற்றுலாத்துறை சம்பந்தமான கல்வி அறிவு அறிமுகப்படுத்தி, போதைவஸ்து பாவனை கலாசார பாதிப்பு சம்பந்தமான விழிப்பூட்டல் வகுப்புகள் நடத்தப்பட வேண்டும்.

7. சுற்றுலாத்துறையில் பதிவுசெய்யப்படாமல் இயங்கும் சுற்றுலாத்துறை வியாபாரத்துறையை பதிவுசெய்து தரப்படுத்தி கட்டுப்பாட்டு முறையை அமுல்படுத்துவதற்கு உதவிகள் வழங்கப்படவேண்டும்.

8. கலாசார சுற்றுலா, மருத்துவ சுற்றுலா, விளையாட்டுத்துறை சுற்றுலா, இயற்கை வள சுற்றுலா போன்ற துறைகளை அபிவிருத்தி செய்வதற்கு உதவிகள் வழங்கப்பட வேண்டும்.

9. இலங்கையில் 6 துறைமுகங்கள் உள்ளதை சுட்டிக்காட்டி சுற்றுலாப் பிரயாணிகளுக்கான கப்பல் துறைகளில் முதலீடு செய்வதற்கு உலக வங்கி உதவி புரிய வேண்டும்.

10. வெளிநாட்டு முதலீட்டாளர்களை கவரும் வகையில் முதலீட்டாளர்களுக்கு தற்போதைய நாட்டின் பொருளாதார நிலைமையை கருத்திற் கொண்டு விசேட சலுகைகளை வழங்க வேண்டும் என்றும் கோரிக்கை வைக்கப்பட்டது.

11. இலங்கையில் சுமார் 25 மாவட்ட மட்ட வர்த்தக கைத்தொழில் சம்மேளனமும் 9 தேசிய ரீதியான வர்த்தக சம்மேளனமும் தங்களது நடவடிக்கைகளை முன்னெடுப்பதில் பாரிய நிர்வாக சிக்கல்களை எதிர்நோக்குவதனால் 3 வருடத்துக்கு நடைமுறைப்படுத்துவதற்கான நிதி உதவிகளை இந்நிறுவனங்களுக்கு வழங்குமாறும் கோரிக்கை விடுக்கப்பட்டது.

பற்சிகிச்சை நிலையங்களை சமுதாய மட்டத்திற்கு கொண்டுசெல்ல கல்முனையில் நடவடிக்கை

(மாளிகைக்காடு நிருபர்)

வைத்தியசாலைகளில் மாத்திரம் செறிவாக்கப்பட்டு இருக்கின்ற பற்சிகிச்சை நிலையங்களை பரவலாக்கி பல் வைத்திய நிபுணர்களின் சேவையை சமூக மட்டத்திற்கு கொண்டுசெல்வதற்கான வரைவு தொடர்பான கலந்துரையாடல் நேற்று கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் நடைபெற்றது.

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஐ.எல்.எம்.றிபாஸ் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், பிரதம அதிதியாக கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி மெலிண்டன் கொஸ்தா பங்குபற்றினார்.

மேலும் இந்நிகழ்வில் பணிமனையின் பிரதி பணிப்பாளர் வைத்தியர் எம்.பீ.ஏ.வாஜித், கல்முனைப் பிராந்திய அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் தலைவர் வைத்தியர் எம்.சீ.எம்.மாஹிர், கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் பிரிவுத் தலைவர்கள், வைத்திய அத்தியட்சகர்கள், சுகாதார வைத்திய அதிகாரிகள், பொறுப்பு வைத்திய அதிகாரிகள் உள்ளிட்ட சுகாதார உத்தியோகத்தர்களும் கலந்துகொண்டனர்.

குறித்த கலந்துரையாடலில் வாய் சுகாதாரப் பிரிவை மேம்படுத்தி, தரமான சேவைகளை மக்களுக்கு வழங்குவது தொடர்பில் நீண்ட கலந்துரையாடல் இடம்பெற்றதுடன், பல் வைத்திய நிபுணர்களினால் தனித்தனியான முன்மொழிவுகளும் சமர்ப்பிக்கப்பட்டன.

இந்நிகழ்வில் பேராசிரியரும் விசேட மகப்பேற்று நிபுணருமான எம்.திருக்குமார் விசேட விரிவுரை ஒன்றை நிகழ்த்தியதுடன், குழந்தை மருத்துவ விசேட வைத்திய நிபுணர் எஸ்.என்.ரொசாந்த் விசேட விரிவுரை ஒன்றை நிகழ்த்தினார். குறித்த நிகழ்வை கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் வாய் சுகாதாரப் பிரிவின் பிராந்திய பற்கிச்சை நிபுணர் எம்.எச்.எம்.சரூக் இணைப்புச் செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

கல்லடி இக்னேசியஸ் வித்தியாலயத்தில் போதைப்பொருள் தடுப்பு கருத்தரங்கு

(கல்லடி நிருபர்)

காத்தான்குடி பொலிஸ் பொறுப்பதிகாரியின் ஏற்பாட்டில் மட்டக்களப்பு கல்லடி புதுமுகத்துவாரம் புனித இக்னேசியஸ் வித்தியாலய மாணவர்களுக்குப் ‘போதைவஸ்திலிருந்து சிறுவர் பாதுகாப்பு’ எனும் தொனிப்பொருளில் மாணவர்களை விழிப்பூட்டும் கருத்தரங்கு நேற்று (02) வித்தியாலய ஒன்றுகூடல் மண்டபத்தில் இடம்பெற்றது.

வித்தியாலய அதிபர் திருமதி வசந்தி ஜெயந்திரராஜா தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், காத்தான்குடி பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த சிறுவர் பாதுகாப்பு தொடர்பான பெண் பீ.சி.ஜெயசுதா இதன்போது மாணவர்கள் தங்கள் பாதுகாப்புத் தொடர்பில் கூடிய கவனம் செலுத்த வேண்டுமெனவும், குறிப்பாக, நீங்கள் வாகனங்களில் பயணம் செய்யும்போதும், அன்றாடம் பயணிக்கும் இடங்களிலும் பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டும் எனத் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் பொலிஸ் சார்ஜன்ட் எம்.எஸ்.எம்.ஜின்னா, பொலிஸ் உத்தியோகத்தர்கள், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

வாழ்வாதாரம் பாதிக்கப்பட்ட குடும்பத்துக்கு ரூ. 20 இலட்சம் பெறுமதியில் வீடு கையளிப்பு

(செங்கலடி நிருபர்)

மட்டக்களப்பு, ஏறாவூர்ப்பற்று, செங்கலடி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட சித்தாண்டி - இலுக்குப்பொத்தானை கிராமத்தில் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்ட குடும்பமொன்றிற்கு லண்டன் ஈழபதீஸ்வரர் ஆலய நிர்வாக சபையின் நிதியுதவியினால் சுமார் 20 இலட்சம் ரூபா பெறுமதியில் செங்கலடி, பலாச்சோலை கிராமத்தில் அமைக்கப்பட்ட வீடு பயனாளியிடம் கையளிக்கப்பட்டது.

சித்தாண்டி, இலுக்குப்பொத்தானை கிராமத்தில் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்ட நிலையில் பல குடும்பங்கள் வசிப்பதாக லண்டன் ஈழபதீஸ்வரர் ஆலய நிர்வாக சபையினரிடம் முன்வைத்த கோரிக்கைக்கமைய லண்டன் ஈழபதீஸ்வரர் ஆலயத்தின் கிராமிய, சமூக, பொருளாதார மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் தெரிவுசெய்யப்பட்ட பயனாளியான கிருஸ்ணபிள்ளை சிறிதேவி குடும்பத்திற்கு வீடு அமைப்பதற்கான நிதியை லண்டனில் வசிக்கும் திருமதி கிருசாந்தன் குடும்பத்தினர் வழங்கியிருந்தனர்.

லண்டன் ஈழபதீஸ்வரர் ஆலய நிர்வாக சபையின் உதவித் திட்டத்திற்கான மட்டக்களப்பு மாவட்ட இணைப்பாளர் நாகராஜா ஆனந்தராஜா தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சீனித்தம்பி யோகேஸ்வரன், ஏறாவூர்ப் பற்று செங்கலடி பிரதேச சபை தவிசாளர் சி.சர்வானந்தன், பிரதேச சபை உறுப்பினர் வேல் பரமதேவா மற்றும் லண்டன் ஈழபதீஸ்வரர் ஆலய நிர்வாக சபையின் உதவித் திட்டத்திற்கான மட்டக்களப்பு மாவட்ட இணைப்பாளர்களான நாகராஜா ஆனந்தராஜா, இ.லோகநாதன் அனோஜன் ஆகியோர் இணைந்து வீட்டைப் பயனாளியிடம் கையளித்தனர்.

கணவனால் கைவிடப்பட்ட நிலையில், நோயினால் பாதிக்கப்பட்டு வாழ்வாதாரத்தை இழந்து நான்கு பிள்ளைகளுடன் பாதுகாப்பற்ற குடிசை வீட்டில் வாழ்ந்துவந்த குறித்த குடும்பம் தொடர்பாக லண்டன் ஈழபதீஸ்வரர் ஆலய நிர்வாக சபைக்கு முன்வைத்த கோரிக்கைக்கு அமைவாக குறித்த வீடு கட்டுவதற்காக நிதி வழங்கப்பட்டுள்ளது.

இலுக்குப்பொத்தானை கிரமத்தில் குடிநீர் பிரச்சினை இருப்பதாக கிராம மக்கள் முன்வைத்த வேண்டுகோளின் அடிப்படையில் இரண்டு பொதுக் கிணறுகளை அமைப்பதற்கும் லண்டன் ஈழபதீஸ்வரர் ஆலய நிர்வாக சபையின் நிதியுதவி வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

கிழக்கு
செய்திகள்
eastthamilan@gmail.com

ஹெரோயினுடன் ஒருவர் கைது

(கோணாவத்தை நிருபர்)

அக்கரைப்பற்று பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அக்கரைப்பற்று காதரியா வீதியில் ஹெரோயினுடன் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

அக்கரைப்பற்று பொலிஸாருக்கு கிடைக்கப்பட்ட இரகசிய தகவலின்படி குறித்த பிரதேசத்திற்கு சென்ற உப பொலிஸ் பரிசோதகர் பகிதரன் தலைமையிலான பொலிஸ் குழுவினர் நபர் ஒருவரை கைதுசெய்துள்ளதுடன், அவரிடமிருந்து 220 மில்லி கிராம் ஹெரோயினும் கைப்பற்றப்பட்டுள்ளது.

கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர் அக்கரைப்பற்று நீதவான் நீதிமன்றத்தில் நேற்று முன்தினம் (01) ஆஜர்படுத்தப்பட்டபோது எதிர்வரும் 15ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

மேலதிக விசாரணைகளை அக்கரைப்பற்று பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

கௌரவமான அரசியல் உரிமை கோரி 93ஆம் நாள் போராட்டம் ஏறாவூர்ப்பற்றில்

இலங்கையின் வடக்கு கிழக்கு மக்களுக்கு
உரிமைகளுடன் கூடிய அரசியல் தீர்வு வேண்டு

சமுகம் MEDIA
LANKASRI

(வாழைச்சேனை நிருபர்)

தமிழ் மக்களுக்கான கௌரவமான அரசியல் உரிமையை வலியுறுத்தி வடக்கு, கிழக்கு ஒருங்கிணைப்பு அமைப்பின் ஏற்பாட்டில் முன்னெடுக்கப்பட்டுவரும் 100 நாள் செயல்முனைவுப் போராட்டத்தின் 93ஆவது நாள் நிகழ்வுகள் நேற்று முன்தினம் காலை (01) மட்டக்களப்பு மாவட்டத்தின் ஏறாவூர்ப்பற்று பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட ஆறுமுகத்தான் குடியிருப்பில் நடைபெற்றது.

நேற்று முன்தினம் (01) காலை ஆறுமுகத்தான் குடியிருப்பு பல்நோக்கு கட்டடத்தில் ஒழுங்கமைக்கப்பட்ட நிகழ்வில் கலந்துகொண்டவர்கள் தாங்கள் நாளாந்தம் எதிர்நோக்கும் பல்வேறுபட்ட பிரச்சினைகள் தொடர்பாக கலந்துரையாடினர். இதேவேளை, தாங்கள் பயமின்றி நடமாடக்கூடிய அரசியல் தீர்வு வேண்டும். கருத்துச் சுதந்திரம் வேண்டுமென கருத்துகள் தெரிவிக்கப்பட்டது.

இதனையடுத்து கிராம உள்வீதியில் ஒன்றுகூடியவர்கள் கையில் வாசகங்கள் எழுதிய பதாகைகளை கையில் ஏந்தியவாறு கோஷங்களை எழுப்பியவாறு ஊர்வலமாக நடந்து சென்றனர்.

வேண்டும் வேண்டும் அரசியல் உரிமை வேண்டும், எங்கள் நிலம் எமக்கு வேண்டும், ஒன்றுகூடுவது எங்கள் உரிமை என கோஷங்களை எழுப்பி ஊர்வலமாக சென்று கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

குறித்த போராட்டத்தில் சிவில் அமைப்பின் கள இணைப்பாளர் இ.ரமேஸ் கலந்துகொண்டு வடக்கு, கிழக்கில் வாழும் மக்களுக்கு கௌரவமானதும் நியாயமான ஓர் அரசியல் உரிமை கிடைக்கப்பெற வேண்டும். அந்த வகையில் எதிர்காலத்தில் சமூக அரசியல் மற்றும் பொருளாதார ரீதியாக கௌரவமான ஒரு மாற்றத்தை எதிர்பார்த்து நிற்கிறோம் எனக் கேட்டுக்கொண்டார்.

குறித்த போராட்டத்தில் பிரதேச மக்கள் தங்கள் பகுதியில் எதிர்நோக்கிவரும் பல்வேறுபட்ட பிரச்சினைகள் தொடர்பாக கலந்துரையாடப்பட்டது.

காணாமலாக்கப்பட்டவர்களது விடயங்கள். வாழ்வாதார விடயங்கள், குடியிருப்பு காணி இல்லாமை, வீடில்லாப் பிரச்சினை, வீதி புனருத்தாரணம், விவசாயம், மீன்பிடி தொழில்களில் எதிர்நோக்கும் பிரச்சினை என பல்வேறுபட்ட விடயங்களை முன்வைத்து கௌரவமான அரசியல் உரிமையை வழங்கக் கோரி போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

வடக்கு, கிழக்கு ஒருங்கிணைப்புக் குழுவின் நெறிப்படுத்துனர் கண்டுமணி லவகுசராசா தலைமையில் வடக்கு, கிழக்கிலுள்ள மாவட்டங்கள் அனைத்திலும் சுழற்சி முறையில் 100 நாட்கள் செயல் முனைவு போராட்டமானது மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

அக்கரைப்பற்று இளைஞர்களுக்கு தொழில்முனைவோர் கருத்தரங்கு

(மாளிகைக்காடு நிருபர்)

விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் கீழ் உள்ள தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் அக்கரைப்பற்று பிரதேச இளைஞர் கழக சம்மேளனத்தின் ஏற்பாட்டில் இளைஞர், யுவதிகளுக்கான தொழில்முனைவோர் கருத்தரங்கு நேற்று (02) அக்கரைப்பற்று பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்வானது அக்கரைப்பற்று பிரதேச செயலாளர் ரீ.எம்.அன்சார் நளீமியின் வழிகாட்டுதலின்கீழ், அக்கரைப்பற்று பிரதேச இளைஞர் சேவை அதிகாரி ஏ.எம்.ஹாறூனின் ஆலோசனையின் பிரகாரம் அக்கரைப்பற்று பிரதேச இளைஞர் கழக சம்மேளனத் தலைவர் எம்.எம்.றுக்சானின் தலைமையில், சம்மேளனத்தின் பொருளாளர் ஹிசாமின் ஒருங்கிணைப்பில் இடம்பெற்றது.

இந்நிகழ்வின் வளவாளராக குளோபல் அட்விசன் நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளரும், இளைஞர் கழக சம்மேளன முன்னாள் தலைவருமான யூ.எம். தில்ஸான் வளவாளராக கலந்துகொண்டு இளைஞர், யுவதிகளுக்கு விளக்கமளித்தார். இக்கருத்தரங்கில், முயற்சியாண்மையின் தேவைப்பாடு, வெற்றிகரமான வணிகம் ஒன்றை நடத்தும் வழிமுறைகள், 20 சிறிய சுய தொழில் ஆலோசனைகள், சந்தைப்படுத்தல் தந்திரோபாயங்கள், அரச மற்றும் தனியார் துறையினரின் இலவச நிதி வசதிகளைப் பெறும் வழிமுறைகள் என்பன தொடர்பாக விரிவாக விளக்கமளிக்கப்பட்டது.

இக்கருத்தரங்கில் அக்கரைப்பற்று, அட்டாளைச்சேனை பிரதேசங்களைச் சேர்ந்த சுயதொழிலில் ஆர்வமுள்ள 30இற்கும் மேற்பட்ட இளைஞர், யுவதிகள் பங்குபற்றியிருந்ததோடு இக்கருத்தரங்கில் தனது திறமையை வெளிக்காட்டிய பங்குபற்றுனருக்கு பரிசில்களும் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

உலக செய்திகள்

பூமிக்கு பாதிப்பு ஏற்படுத்தக்கூடிய

புதிய விண்கற்கள் மூன்று கண்டுபிடிப்பு

பூமி சுற்றுவட்டப் பாதையில் நுழைந்து, மோதி பெரும் பாதிப்பு ஏற்படுத்தக் கூடிய மூன்று விண்கற்களை விஞ்ஞானிகள் கண்டறிந்துள்ளனர்.

சிலியின் செர்ரோ தொலோலோ வட-தென் அமெரிக்க ஆய்வகத்திலுள்ள பிளான்கோ எனப்படும் 4 மீற்றர் நீளம் கொண்ட தொலைநோக்கியின் கெமராவை பயன்படுத்தி கண்டுபிடித்த விஞ்ஞானிகள், பூமி மற்றும் வெள்ளி சுற்றுவட்டப் பாதைகளுக்கு இடையே இருந்த இந்த விண்கற்கள், சூரியனின் ஒளி பிரதிபலிப்பால் கண்டறிவது சவாலான பணியாக இருந்ததாக தெரிவித்தனர்.

கிரீஸில் அகதிகள் படகு கவிழ்ந்து 60 பேர் மாயம்

கிரீஸ் அருகே அளவுக்கு அதிகமான அகதிகளை ஏற்றிவந்த படகொன்று கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் 9 பேர் மீட்கப்பட்டுள்ளதுடன், 60 பேர் காணாமல்போயுள்ளனர்.

இது குறித்து கிரீஸ் கடலோர காவற்படை அதிகாரிகள் தெரிவிக்கையில்,

தலைநகர் ஏதென்ஸுக்கு அருகேயுள்ள தீவைச் சுற்றிலும் சீரற்ற வானிலை நிலவி வந்த நிலையில், அந்தப் பகுதி வழியாக அளவுக்கு அதிகமான அகதிகளை ஏற்றி வந்த படகு கவிழ்ந்து விபத்துக்குள்ளானது. விபத்துப் பகுதியிலிருந்து 9 பேர் மீட்கப்பட்டனர். எனினும், சுமார் 60 பேர் காணாமல்போயுள்ளனர்.

அவர்களை தேடும் பணிகள் தொடர்ந்தும் நடைபெற்று வருகின்றன என்று அதிகாரிகள் தெரிவித்தனர். விபத்து நேரிட்ட கடல் பகுதி மிகவும் ஆபத்து நிறைந்த பகுதி என்று தெரிவிக்கப்படுகிறது.

மீண்டும் இஸ்ரேல் பிரதமராக பெஞ்சமின் நெதன்யாகு

இஸ்ரேலின் பிரதமராக பெஞ்சமின் நெதன்யாகு மீண்டும் பெரும்பான்மையுடன் ஆட்சியில் அமர்வார் என்று தேர்தலுக்குப் பின்னரான கருத்துக்கணிப்புகள் தெரிவிக்கின்றன.

2009ஆம் ஆண்டிலிருந்து இஸ்ரேலின் பிரதமராக நெதன்யாகு பதவி வகித்தார். இந்நிலையில், நெதன்யாகு மீது ஊழல், மோசடி மற்றும் நம்பிக்கை மோசடி குற்றச்சாட்டுகள் கடந்த சில வருடங்களாக எழுந்து வந்தன.

நெதன்யாகு பதவி விலகக் கோரி ஜெருசலேம் உள்ளிட்ட பகுதிகளில் போராட்டங்களும் நடைபெற்று வந்தன. எனினும், தொடர்ந்து நெதன்யாகு தனது பதவியை தக்கவைத்து வந்தார். இந்நிலையில், கடந்த ஆண்டு மார்ச் மாதம் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் நெதன்யாகுவின் லிகுட் கட்சி அதிக இடங்களில் வென்றது. எனினும், பெரும்பான்மைக்குத் தேவையான இடங்கள் கிடைக்கவில்லை. இதனைத் தொடர்ந்து ஆட்சியைத் தக்கவைப்பதில் நெதன்யாகுவுக்குச் சிக்கல் நீடித்து வந்தது.

இஸ்ரேலில் அரபுக் கட்சி தலைமையில் வலதுசாரி அரசியல் கட்சிகள் கூட்டாக இணைந்து நெதன்யாகுவின் ஆட்சிக்கு முற்றுபுள்ளி வைத்தன. நேற்றுமுன்தினம் இஸ்ரேலில் நான்கு ஆண்டுகளில் 5ஆவது முறையாகவும் பொதுத் தேர்தல் நடத்தப்பட்டது. வாக்குப் பதிவுகள் நேற்று எண்ணப்பட்ட நிலையில் (பத்திரிகை அச்சுக்கு செல்லும் வரை தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்படவில்லை) தேர்தலில் பெரும்பான்மையுடன் வெற்றிபெற்று நெதன்யாகு ஆட்சி அமைப்பார் என்று தேர்தலுக்குப் பின்னரான கருத்துக்கணிப்பு முடிவுகள் தெரிவிக்கின்றன.

இதுகுறித்து நெதன்யாகு தெரிவிக்கையில்,

''மக்களின் நம்பிக்கையை நாங்கள் பெற்றுள்ளோம். மக்கள் மாற்றுப் பாதையை தெரிவுசெய்திருக்கிறார்கள். மக்களுக்கு பாதுகாப்பும், அதிகாரமும் வேண்டும். மிகப்பெரிய வெற்றியின் விளிம்பில் இருக்கிறோம். நிலையான அரசை நாம் அளிப்போம்" - என்றார்.

ஒரே பெயருடன் கூடிய 178 பேர் ஒரே இடத்தில்

ஜப்பானில் Hirokazu Tanaka என்ற பெயருடன் கூடிய 178 நபர்கள் ஒரே இடத்தில் கூடி கின்னஸ் சாதனை படைத்துள்ள சம்பவம், இணையத்தில் அதிகம் வைரலாகி வருகிறது.

இதில், 3 வயது குழந்தை முதல் 80 வயது முதியவர் வரை வயது வரம்பின்றி பலரும் கலந்துள்ளனர். Hirokazu Tanaka என்ற அமைப்பு இந்த நிகழ்ச்சியை ஒருங்கிணைத்துள்ளனர்.

இதற்கு முன்பாக கடந்த 2005ஆம் ஆண்டு Martha Stewarts என்ற பெயருடைய 164 பேர் நிகழ்ச்சியொன்றில் கூடியிருந்ததுதான் சாதனையாக இருந்தது.

ஹலோவின் திருவிழாவில் பங்கேற்ற செல்லப் பிராணிகள்

பெருவில் நடத்தப்பட்ட ஹலோவின் திருவிழாவில் வீட்டு வளர்ப்பு விலங்களுக்கு நடத்தப்பட்ட மாறுவேட போட்டியில் ஏராளமான நாய்களும், பூனைகளும் பங்கேற்றனர்.

உலகம் முழுவதும் பல்வேறு நாடுகளில் ஹலோவின் தினம் ஆண்டு தோறும் கோலாகலமாகக் கொண்டாடப்படுவது வாடிக்கை. இந்த ஆண்டு ஹலோவின் தினத்தை முன்னிட்டு பெருவின் லிமா நகரத்தில் செல்லப் பிராணிகளுக்கான ஆடை அலங்காரப் போட்டி நடைபெற்றது. இதில் நூற்றுக்கு மேற்பட்ட நாய்கள், பூனைகள் கலந்துகொண்டன.

மாஸ் காட்டும் எலான் மஸ்க்

ட்விட்டரில் அதிரடி மாற்றம்; 'ப்ளூடிக்'குக்கு 8 டொலர்

ட்விட்டர் நிறுவனத்தை உலகின் நம்பர் வன் பணக்காரரான எலான் மஸ்க் 44 பில்லியன் அமெரிக்க டொலருக்கு கடந்த வாரம் வாங்கினார். இதனையடுத்து தனது அடுத்த அதிரடி நகர்வாக ட்விட்டரின் தலைமை நிர்வாகிகள் உள்ளிட்ட உறுப்பினர்களை கூண்டோடு நீக்கி, அவர் மட்டுமே ஒற்றை தலைமையாக அறிவித்துள்ளார். அத்தோடு ட்விட்டரின் வணிகத்தை மாற்றி அமைக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளார்.

அதன்படி புளூ டிக் பெற்றுள்ள ட்விட்டர் பயனாளர்களிடம் மாதக் கட்டணமாக 8 டொலர் வசூலிக்கப்படும் என அதன் உரிமையாளர் எலான் மஸ்க் அறிவித்துள்ளார்.

கட்டணம் செலுத்தி 'ப்ளூடிக்' பெறும் பயனர்களுக்கு பதில்கள் மற்றும் தேடலில் முன்னுரிமை அளிக்கப்படும் எனவும், அதிக நேரங்கள் கொண்ட வீடியோ மற்றும் ஆடியோ பதிவிடும் வசதியும், பாதி விளம்பரங்கள் மட்டுமே இருக்கும் வசதியும் வழங்கப்படும் எனவும் எலான் மஸ்க் அறிவித்துள்ளார்.

பல அரசியல் தலைவர்கள், நடிகர், நடிகைகள் உள்ளிட்ட பிரபலங்கள் அவர்களின் சரிபார்க்கப்பட்ட உண்மையான கணக்கு என்பதற்கு அங்கீகாரமாக 'ப்ளூடிக்' வழங்கப்படுகிறது. இதற்கு மாத கட்டணம் செலுத்தவேண்டுமென்ற மஸ்க்கின் திட்டம், உலக முழுவதும் ட்விட்டர் பயனர்கள் மத்தியில் அதிர்ச்சியை ஏற்படுத்தியது.

இந்நிலையில், அடுத்த அதிரடியாக ட்விட்டரின் ஒட்டுமொத்த போர்ட் உறுப்பினர்களை கூண்டோடு நீக்கிவிட்டு, அவர் மட்டுமே போர்ட் உறுப்பினர் என பத்திரங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணையத்திடம் நேற்றுமுன்தினம் ஆவணங்களை தாக்கல் செய்துள்ளார். இந்தப் புதிய போர்ட் தற்காலிகமானது எனவும் மஸ்க் தெரிவித்துள்ளார்.

ஒரு நிறுவனத்தின் முக்கிய முடிவுகளை எடுக்கக்கூடியது போர்ட் உறுப்பினர்களே. அப்படியிருக்கையில், மஸ்க் மட்டுமே போர்ட் உறுப்பினராக இருப்பதால் அவர் இஷ்டத்திற்கு எந்த முடிவையும் எடுக்கலாம்.

ஏற்கனவே, ட்விட்டரில் மஸ்க்குக்கு பிறகு அதிகமான பங்குகளை (ரூ.15.5 ஆயிரம் கோடிக்கு - இந்திய ரூபாப்படி) சவூதி இளவரசர் அல்வலீத் பின் தலாலின் கிங்டம் ஹோல்டிங் நிறுவனம் கைப்பற்றியுள்ளது. அரசியல் ஆதிக்கம் செலுத்தக்கூடிய ட்விட்டர் போன்ற பிரபல சமூக ஊடகத்தில், அமெரிக்க அரசியலில் தாக்கத்தை ஏற்படுத்தக் கூடிய சவூதி நிறுவனம் அதிக பங்குகளை கொண்டிருப்பது அந்நாட்டு அரசியல் தலைவர்கள் மத்தியில் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது.

சென்னை வியாசர்பாடி பகுதியிலுள்ள சுரங்கப்பாதை வழியாக செல்ல முயன்றபோது, சுரங்கப்பாதையில் தேங்கியிருந்த மழைநீரில் சிக்கிக்கொண்ட பஸ்ஸிலிருந்து இன்னலுக்கு மத்தியில் பயணிகள் வெளியேற்றப்பட்டபோது......

சென்னையில் 2 நாட்களுக்கும் மேலாக பெய்துவரும் கடும் மழை காரணமாக மாநகரின் பெரும்பாலான பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. அத்தோடு இருவர் உயிரிழந்துள்ளனர். பல சுரங்கப்பாதைகள் மூடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மோர்பி தொங்கு பால விபத்து கடவுளின் விருப்பம்

நீதிமன்ற விசாரணையில் குற்றவாளி தெரிவிப்பு

''குஜராத் மோர்பி தொங்கு பால விபத்து கடவுளின் விருப்பம்'' என குற்றவாளிகளில் ஒருவர் நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

குஜராத்தில் மோர்பி நகரில், தர்பங்கா - நஜார்பாக் ஆகிய பகுதிகளை இணைக்கும் வகையில், மச்சூ ஆற்றின் குறுக்கே இரும்புக் கம்பிகளாலான தொங்கு பாலம் அறுந்து வீழ்ந்த விபத்தில்141 பேர் உயிரிழந்துள்ளதுடன், 170 பேர் மீட்கப்பட்டு வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட நிலையில் சிகிச்சைபெற்று வருகின்றனர். உயிரிழந்தவர்களில் 41 குழந்தைகளும் உள்ளடங்குவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இச்சம்பவம் தொடர்பாக பாலத்தை பராமரித்த ஓரிவா நிறுவனத்தின் மேலாளர் தீபக் பரேக், மற்றொரு மேலாளர், இரண்டு சப் கென்ட்ராக்டர்கள் மற்றும் ரிக்கெட் விற்பனையாளர், பாதுகாவலர்கள் உள்ளிட்டோரை பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

இந்நிலையில், நீதவான் எம்ஜே கான் முன்பு ஆஜர்படுத்தப்பட்ட தீபக் பரேக் தெரிவிக்கையில், ''பால விபத்து போன்ற துரதிர்ஷ்டவசமான சம்பவம் நடப்பதற்கு கடவுளின் விருப்பம்'' என்றார்.

மோர்பி பொலிஸ் டிஎஸ்பி தரப்பில் ஆஜரான வழக்கறிஞர் தெரிவிக்கையில், தொங்கு பாலத்திலிருந்த கேபிள் துரு பிடித்திருந்தது. புதுப்பிப்பு பணியில் ஈடுபட்ட நிறுவனம் அந்த கேபிளை மாற்றவில்லை. பராமரிப்பு மற்றும் நிர்மாணப் பணியில் ஈடுபட்ட நிறுவனம், நடைபாதையை மட்டும் மாற்றியது. கேபிள் அறுந்த பகுதி துருப்பிடித்து காணப்பட்டது. அதனை சரி செய்திருந்தால், விபத்து நடந்திருக்காது - என்றார்.

உரிமையாளர்கள் மாயம்

இந்த பால பராமரிப்புப் பணியில் ஈடுபட்ட நிறுவனத்தின் உரிமையாளர்கள் மாயமாகியுள்ளனர்.

இந்தப் பாலம் அடுத்த 8 முதல் 10 ஆண்டுகளுக்கு தாங்கும் என உறுதி தெரிவித்த ஓரிவா நிறுவனத்தின் மேலாண் இயக்குநர் ஜெய்சுக்பாய் படேலை 3 நாட்களாக காணவில்லை. இந்த நிறுவனத்தின் பண்ணை வீடு பூட்டப்பட்டுள்ளது.

அங்கு பாதுகாவலர் கூட இல்லை. பராமரிப்புப் பணி தொடர்பாக மோர்பி மாநகராட்சியுடன் ஒப்பந்தம் போட்ட படேல் என்பவரும் குடும்பத்துடன் காணவில்லை. தொங்கு பாலம் திறக்கப்பட்ட அன்றே அவர் கடைசியாக தென்பட்டுள்ளார். அவர்கள் மீது வழக்குப்பதிவு செய்யாதது ஏன் என பால விபத்தில் தப்பியவர்கள் கேள்வியெழுப்பியுள்ளனர்.

வழக்கறிஞர்கள் முடிவு

பால விபத்தில் கைதாகி உள்ளவர்கள் மற்றும் முக்கிய குற்றவாளிகளுக்கு ஆதரவாக ஆஜராக போவதில்லை என மாவட்ட வழக்கறிஞர்கள் சங்கம் முடிவுசெய்துள்ளது.

ஈகுவடோரில் சிறை முற்றுகை: வன்முறையில் ஐவர் உயிரிழப்பு

ஈகுவடோரில் கைதிகள் இடமாற்றத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்து நடைபெற்ற வன்முறையில் 5 காவல்துறை அதிகாரிகள் கொல்லப்பட்டுள்ளதுடன், 15 பேர் படுகாயமடைந்துள்ளனர். இச்சம்பவம் அங்கு பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

ஈக்குவடோரின் குவாயாகுயில் பகுதியிலுள்ள சிறையில் இரு பிரிவு கைதிகளிடையே தொடர்ந்து மோதல் ஏற்பட்டு வந்துள்ளது. இதையடுத்து கொலை, கொள்ளை, போதைப்பொருள் கடத்தல் வழக்கில் சிறைத்தண்டனை அனுபவித்து வந்த 200இற்கும் மேற்பட்ட கைதிகளை பல்வேறு சிறைகளுக்கு மாற்ற ஈகுவடோர் அரசு திட்டமிட்டது.

இதன்படி பல்வேறு கட்டங்களாக கைதிகள் வேறு சிறைகளுக்கு மாற்றப்பட்டு வந்தனர். இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து சமூக விரோதிகள் கும்பலொன்று குவாயாகுயில் சிறையை முற்றுகையிட்டு திடீர் தாக்குதலில் ஈடுபட்டது.

சிறை அருகே சுமார் 6 இடங்களில் அடுத்தடுத்து குண்டு வெடிப்புகள் நடத்தப்பட்டன. பொலிஸாரின் ரோந்து வாகனங்கள் மீதும் சரமாரி தாக்குதல் நடத்தப்பட்டது. இந்தத் தாக்குதல்களில் 5 பொலிஸ் அதிகாரிகள் உயிரிழந்துள்ளதுடன், படுகாயமடைந்த 15 பொலிஸ் மற்றும் சிறைத்துறை காவலர்கள் வைத்தியசாலையில் தீவிர சிகிச்சைபெற்று வருகின்றனர்.

முன்னதாக சிறை மறுசீரமைப்புத் திட்டத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்து சிறைக்குள் பிணைக் கைதிகளாக சிறைபிடிக்கப்பட்ட 7 பொலிஸ் அதிகாரிகள் அதிரடிப்படையினரால் மீட்கப்பட்டனர். சமூக விரோதிகளின் தாக்குதல்களைத் தடுக்கும் விதமாக குவாயாகுயில் சிறைக்கு உள்ளேயும், வெளியேயும் பாதுகாப்பு பன்மடங்கு அதிகரிக்கப்பட்டுள்ளது.

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7